
www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

பிப். '96
ம.க.இ.க. மாத இதழ்
விலை ரூ. 4.00

## சாராயத்தால் வளரும் சர்வகட்சி ஜனநாயகம்



படிப்பகம்

www.padippakam.com

தமிழ் மக்கள் இசைவிழாவிற்கு இது மூன்றாவது ஆண்டு. கடந்த இரண்டாண்டுகளாகத்தான் ம.க.இ.க. இவ்விழாவை நடத்தி வருகிறதெனினும், இக்குறுகிய காலத்தில் தமிழ் மக்கள் மத்தியிலும், தமிழ் மக்கள் இசை ஆர்வலர்கள் மத்தியிலும், பார்ப்பனிய எதிர்ப்பு உணர்வு கொண்ட அனைவர் மத்தியிலும் இவ்விழா ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையாகாது. பார்வையாளர்கள் மட்டுமின்றி பங்கேற்கின்ற அறிஞர்களும், கலைஞர்களும் இது நமது விழா என்று கருதிப் பங்கேற்ற நிகழ்ச்சி தமிழ் மக்கள் இசைவிழா.

தமிழ் மக்களின் இசையையும், இசை மரபையும், இசைக் கலைஞர்களையும் கண்டறிந்து, கொள்வன வற்றைக் கொண்டு தமிழ் மக்களின் வாழ்வை மேம்படுத்தும் திசையில் இசையை வளர்க்க நாம் நடத்தும் கொண்டாட்டம் இவ்விசைவிழா.


களவாடிய இசையைக் கருநாடக இசையென்று சாதித்து வருவோரின் மோசடிக்கும், இசையென்ற பெயரில் இளைஞர்கள் மத்தியில் பரப்பப்படும் சீரழிவுக்கும் எதிரான போராட்டம் தமிழ் மக்கள் இசை விழா.

ஆனால் கொண்டாடும் நிலையில் இல்லை இந்த ஆண்டு. ஈழத்தமிழ் மக்களின் மீது நடத்தப்படும் இனப்படுகொலையையும், தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தென் மாவட்டங்களில் நடத்தப்படும் சாதி வெறித் தாக்குதலையும் கண்டிக்குமுகமாகவும், தமிழ் மக்களின் துயரில் பங்கு கொள்ளுமுகமாகவும் தமிழ் மக்கள் இசைவிழாவை இவ்வாண்டு ரத்து செய்வதென முடிவு செய்தோம். நாம் ரத்து செய்தது கொண்டாட்டத்தைத்தானே தவிர போராட்டத்தை அல்ல.

ஈழம் எரிந்து சாம்பலானாலும், தமிழகமே சாதிவெறியால் பொசுங்கினாலும், காவிரி நீரின்றித் தஞ்சை வயல்கள் கருகிப் பூண்டற்றுப் போனாலும், என்ன நடந்தாலும் நிற்காத தியாகய்யர் உற்சவக் கொண்டாட்டத்தைக் கண்டித்து அதன் துவக்கவிழா நாளன்று - சனவரி 5 - திருவையாற்றில் ஆர்ப்பாட்டம் நடத்துவதென அறிவித்தோம்.

ஏனென்றால், தமிழ் புறக்கணிக்கப்படுவதும் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுவதும் வேறுவேறு விவகாரமல்ல; தமிழினத்தின் உரிமை களவாடப்படுவதும் தமிழிசை களவாடப்படுவதும் வேறுவேறு விவகாரமல்ல; சாதியால் துண்டாடப்பட்ட தமிழ் மக்கள் மோதி அழிவதும் அவ்வாறு நம்மைத் துண்டாடிய பார்ப்பனீயம் பாடி மகிழ்வதும் வேறுவேறு விவகாரமல்ல.

1992-இல் முதன்முதலாகத் தமிழ் மக்கள் இசைவிழாவைத் திருவையாற்றில் நடத்த அனுமதி கேட்டபோது மறுத்தது காவல்துறை. தஞ்சையில் நடத்தக்கூட அனுமதி கிடையாதென்றது தமிழக அரசு. அவ்வாறு அனுமதித்தால் தியாகய்யர் உற்சவத்திற்கு வரும் வித்துவான்கள் மற்றும் ரசிகமணிகளின் உயிருக்கே ஆபத்து நேரிடலாம் என்று வாதாடியது தமிழக அரசு. பார்ப்பனர்களையும், கருநாடக இசையையும் விமரிசிக்கக் கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் அனுமதி தருவதாகக் கூறியது உயர்நீதி மன்றம்.



## தமிழ் மக்கள் இசை விழா மூன்றாம் ஆண்டு




ஆனால் தஞ்சை விவசாயிகள் தவிக்கும் போது, காவிரி காயும் போது அதன் கரையிலேயே 'ததரினன்னா' பாடுவதற்கு மட்டும் தடையேதும் இல்லை. இந்த வக்கிரத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் என்று அறிவித்தவுடனே, ம.க.இ.க.வின் தஞ்சைக் கிளைச் செயலர் தோழர் காளியப்பனை வலைவீசித் தேடியது காவல்துறை. நள்ளிரவில் அவர் வீடு புகுந்து சோதனை என்ற பெயரில் போராட்டத்திற்கான துண்டறிக்கைகளை வாரிச் சென்றது. சுவரொட்டி ஒட்டிய தோழர்கள் கைது செய்யப்பட்டனர். சுவரொட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன. திருவையாறு முழுவதும் அங்கிங்கெனாதபடி எங்கும் வெள்ளை உடையில் பிரகாசித்தனர் உளவுத்துறையினர்.

முன்னறிவிப்பு செய்து நடத்தப்படும் ஒரு ஆர்ப்பாட்டத்தைத் தடுக்க ஏன் இத்தனை அமர்க்களம்? இது தியாகய்யர்வாளை முன்னிட்டு மட்டுமல்ல, அந்த உற்சவத்தைத் துவக்கி வைக்க வர இருந்த 'பெரியவாளு'க்காகத்தான் இந்த உஷார் நிலை.

ஆர்ப்பாட்டக்காரர்களை ஊருக்குள்ளேயே நுழையவிடக் கூடாது என்ற காவல்துறையின் வழக்கமான திட்டத்தை வழக்கம் போல மீறி நகரில் நுழைந்தார்கள் தோழர்கள். மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன் தலைமையில் கண்டனப் பேரணி 'நீரோக்கள்' இசைபாடும் இடத்தை நோக்கி நகர்ந்தது. 149 ஆண்டுகளாக உற்சவம் நடத்தியும் 'அவாளை' நெருங்காத மக்கள் திரளாக ஊர்வலத்தை நெருங்கி வந்தார்கள். உடனே 'மக்களின் நண்பர்கள்' தடிக்கம்பைச் சுழற்றத் துவங்கினார்கள்.

மக்கள் கூட்டத்தைக் கலைத்தால் விளைவுகள் மோசமாக இருக்கும் என்று தோழர்கள் எச்சரித்தவுடனே, விழாப் பந்தலில் அமர்ந்திருக்கும் ஜாயிண்ட் செக்ரட்டரிகள், அண்டர் செக்ரட்டரிகள் அடங்கிய அக்ரகாரம் காவல்துறை அதிகாரிகளின் மனக்கண் முன் தோன்றி மறைய, லத்திக் கம்பை கக்கத்தில் வைத்தார்கள்.

தடையை மீறியதற்காகக் கைது செய்யப்பட்ட தோழர்களிடம் ''உங்களை விடுதலை செய்தால் மீண்டும் வருவீர்களே'' என்று இரவு 12 மணிக்கு கவலை தெரிவித்தார்கள் காவல்துறை அதிகாரிகள். ''சிறைக்கு அனுப்பினால் நிச்சயமாக வேறு தோழர்கள் வருவார்கள்'' என்ற பதிலைக் கேட்டு இராப்பகலாய் தெருவில் நின்று போவோர் வருவோரின் முகத்தையெல்லாம் உற்றுப் பார்த்து, அவர்கள் கர்நாடக சங்கீதத்தின் விரோதிகள்தானா என்று கண்டுபிடிக்கும் தொல்லையைவிட இவர்களை விடுதலை செய்துவிடுவதே மேல் என்று கருதி தோழர்களை விடுவித்தது காவல்துறை. ●

படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

● போர்: 12
● குரல்: 6-9
● நவ. டிச'95, ஜன. பிப்'96

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 48.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்
இரா.சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை-600 031.

# உச்சநீதி மன்றத்தின் கரசேவை

இந்துத்துவம் என்ற பார்ப்பன பாசிசக் கோட்பாட்டிற்கு விளக்கம் கூறி நியாயப் படுத்தும் பொறுப்பை இப்போது உச்சநீதிமன்றம் ஏற்றிருக்கிறது. மகாராட்டிர முதல்வர் ஜோஷியின் (சிவசேனா) தேர்தல் செல்லாது எனத் தொடுக்கப்பட்ட வழக்கைத் தள்ளுபடி செய்த உச்சநீதிமன்ற நீதிபதி வர்மா, அத்துடன் நில்லாது பாரதீய ஜனாதவின் இந்துத்துவக் கோட்பாட்டிற்கு ஒரு விளக்கமும் அளித்து அதைப் புனிதப் படுத்தியுள்ளார். வரிக்கு வரி கோல்வால்கரின் வாசகங்களை வழிமொழிகின்ற இத்தீர்ப்பை அத்வானி வரவேற்றுக் குதாகலிப்பதில் வியப்பில்லை.

ஆனால் பத்திரிகைகளும், வழக்கறிஞர்களும், ஜனதா தளம் போலி கம்யூனிஸ்டுகள் போன்ற கட்சியினரும் இத்தீர்ப்பு குறித்து பெரும் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர். பாபர் மசூதி இடிப்பை ஒட்டி பாரதீய ஜனதா மாநில அரசுகள் கலைக்கப்பட்டதை அங்கீகரித்து உச்சநீதி மன்றம் வழங்கிய தீர்ப்பை நினைவு படுத்தி பிலாக்கணம் வைக்கின்றனர். ''மதசார்பின்மை என்பது நமது அரசியல் சட்டத்தின் அடிப்படை அம்சம்'', என்று அந்த தீர்ப்பில் உச்சநீதிமன்றம் சுட்டிக் காட்டியதை நினைவுபடுத்தி, இந்த தீர்ப்பு அதை மறுதலித்து விட்டதாகக் கூறுகின்றனர். நீதிபதி வர்மா ஆர்.எஸ்.எஸ். சார்புடைய நபர் என்றும் சிலர் கோபத்துடன் சுட்டிக் காட்டுகின்றனர். அது உண்மையாகவும் இருக்கலாம்.

எனினும் அதுவல்ல பிரச்சனை. கடைந்தெடுத்த பிற்போக்கான தீர்ப்புக்களை உச்சநீதிமன்றம் வழங்குவதொன்றும் முதன் முறையல்ல. ராமனை தேசிய நாயகன் என்று குறிப்பிட்டதும், முஸ்லீம்கள் பாபர் மசூதியில் தொழுகை நடத்த அனுமதி மறுத்ததும், கடப்பாரை ஏந்திய பஜனைக்கு அனுமதியளித்ததும் உச்சநீதிமன்றம் தான் என்பதை இந்த ஓட்டுக் கட்சிகள் மறக்க விரும்பினாலும் வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். இந்து மத வெறிக்கு எதிராக மக்களைத் திரட்டிப் போராட வக்கில்லாமல் மசூதியா, கோவிலா என்பதை நீதிமன்றத்தின் முடிவுக்குத் தள்ளிவிட்டு விட்ட கையாலாகாத பேர்வழிகள் தான் இப்போது உச்சநீதிமன்ற தீர்ப்பை கண்டிக்கிறார்கள்.

இந்துத்துவத்தை உயர்த்திப் பிடிக்கும் இந்த தீர்ப்பை முறியடிக்க இவர்கள் முன் வைக்கும் வழிமுறை இவர்களையே அம்பலப்படுத்துகிறது. ''இந்தக் குழப்பத்தைத் தீர்க்க உதவும் என்றால் ஒரு அரசியல் சட்ட திருத்தத்தை ஆதரிக்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்'', என்று மார்க்சிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினர் பிரகாஷ்காரத் மற்றும் ஜெயபால் ரெட்டி (ஜனதா தளம்) ஆகியோர் அறிவித்துள்ளனர். மதத்தை அரசியல் நோக்கத்திற்குப் பயன்படுத்துவதை தடை செய்யும் அதிகாரம் எதையும் நிலவுகின்ற அரசியல் நிர்ணயச் சட்டம் வழங்கவில்லை என்பதுதான் இதற்குப் பொருள். கேவலம் காகிதத்தில் கூட மத சார்பின்மையை ஐயந்திரிபற எழுதி வைக்க முடியாதவர்கள் குறிப்பிட்ட சில தீர்ப்புகளையும் நீதிபதிகளையும் குற்றம் சாட்டிப் பொருமுவது வெட்கக் கேடு.

மதத்தை அரசியலுக்குப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காகவென்று கூறி நரசிம்மராவ் அரசு கொண்டு வந்த 80-வது அரசியல் சட்ட திருத்தத்தை எதிர்த்த பாரதீய ஜனதா, அதை சட்டரீதியாக போராடி முறியடிக்கப் போவதாக அறிவித்தது. அந்த அறிவிப்பின் பொருள் விளங்காதவர்களுக்கு நீதிபதி வர்மாவின் தீர்ப்பு பொழிப்புரை எழுதியிருக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறினால் இந்திய அரசியல் நிர்ணய சட்டத்தில் மதசார்பின்மை கொள்கைக்கு எந்த விதமான சட்டரீதியான உத்திரவாதமும் தரப்படவில்லை என்ற உண்மையையும், நிலவுகின்ற அரசியல் சட்டத்தைத் திருத்தாமலேயே பாரதீய ஜன்தா இந்து ராஷ்டிரத்தை அமைத்துக் கொள்ள முடியும் என்ற 'புனிதமான உண்மையையும்' இந்தத் தீர்ப்பு அம்பலப்படுத்தி உள்ளது.

அதுமட்டுமல்ல, பாபர் மசூதி இடிப்பு, மதசார்பின்மை, தொலை பேசி அன்னிய மயம், ஹவாலா ஊழல், காவிரி நீர் பிரச்சனை போன்ற முடிவெடுக்க வேண்டிய அனைத்து கொள்கை பிரச்சனைகளையும் உச்சநீதி மன்றத்தின் தோள்களில் தள்ளி விட்டு விட்டு பொறுக்கித் தின்பது ஒன்றை மட்டுமே தங்களது காரிய சாத்தியமான கொள்கையாக வரித்துக் கொண்டிருக்கும் ஓட்டுக் கட்சிகளின் முகவிலாசத்தையும் இந்தத் தீர்ப்பு அம்பலப்படுத்தி உள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

# ஜனநாயகப் பூங்கா சாராயப் பூக்கள்

''ஈநாடு'' - சில ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த மலையாளத் திரைப்படம். மலையாள வாடை கூட இல்லாத ஊர்களிலெல்லாம் புகுந்து சாதாரண மக்களை உலுக்கி விட்டது. அரசியல்வாதிகள், கிரிமினல் குற்றக் கும்பல்களின் கூட்டு உருவாகி, படிப்படியாக வளர்ந்து, சமூக ஆதிக்கம் பெறுவதன் விளைவைச் சித்தரித்தது. சினிமாத்தனமான மசாலாக்கள் எல்லாம் இருந்தாலும், அதன் இறுதிக் காட்சியில் இந்த சமூக விரோதிகளின் பேராசையினால் பெருக்கெடுத்து ஓடும் விஷச் சாராயத்துக்கு புதுமணத் தம்பதி உட்பட ஒரு ஊரே பலியாகும் கொடூரத்தைக் காட்டியது. மனிதாபிமான மிக்க அனைவாது மனத்தையும் கனக்கச் செய்தது. கேரள மாநிலம் எர்ணாகுளம் அருகே விப்யான் கிராமத்தில் நடந்த கோரமான விஷச் சாரய சாவுகளை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட கதைதான் அந்த ஈநாடு.

அத்தகைய விஷச் சாராயச் சாவுகளோ தொடர்கதையாகிவிட்டன. கடந்த மூன்று மாதங்களில் தமிழ்நாட்டிலேயே சாத்தூரில் ஐம்பது பேரும் திருச்சியில் ஐம்பது பேருமாக நூற்று பேரைக் காவு கொண்டுவிட்டது விஷச் சாராயம். கண்கள் அவிந்து போய், குடல் வெந்து இன்னமும் நடைபிணமாக்கப்பட்டவர்கள் ஏராளம். பிரேதப் பரிசோதனை செய்து அறுத்துப் போட்ட கணவன்மார்களை மடியில் போட்டுக் கொண்டு கதறும் பெண்களின் துயரம் எவ்வளவு கொடியது!

வீட்டில் உலைபொங்குவதற்கு ஒரே ஆதாரமாக இருந்த குடும்பத் தலைவனையும் இழந்துவிட்டோமே என்று அந்த அபலைப் பெண் அழுது புலம்புவதைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் ஐந்து மாநிலங்களில் பத்து சாராய வடி ஆலைகளை வைத்து நடத்துபவன்; ஐந்து மாநிலங்களிலும் மேல் நாட்டு மதுவகைகளுக்கு மொத்த விற்பனை முகவர் - ஆந்திர காங்கிரசு எம்.பி. சுப்பிராமரெட்டியைச் சுட்டுக்கொன்றுவிட்டார்கள் என்பதற்காக, இந்த மாநில முதல்வர் ஜெயலலிதாவும் அவரது உடன்பிறவா சகோதரி சசிகலாவும் தனி விமானத்திலேயே கண்ணீர் வடித்தது எதற்காக! ஒரு பொது இடமாக இல்லாவிட்டால், குண்டு துளைக்காத கோட்டு அணிந்திரா விட்டால், அந்த சாராய வியாபாரியின் பிணத்தின் மீது விழுந்து புரண்டு புரண்டு அழுதிருப்பார்கள் - அவ்வளவு சோகம் அவர்கள் முகத்திலே!

உடன்கட்டை எம்ஜிஆர் சாவுக்கோ, உடன்பிறந்த சகோதரர் சாவுக்கோ ஏற்படாத அளவுக்கு துக்கம் ஜெயலலிதாவுக்கு! அவன் சினிமா அதிபராகவும் இவர் சினிமா நடிகையாகவும் இருந்த காலத்தில் ஏற்பட்ட ''தொடுப்பு'' வளர்ந்து அவன் எம்.பி.யாகி, மத்தியில் மந்திரி பதவியை நெருங்கவும் இவர் மாநில முதல்வராக உயர்ந்ததோடு தொடர்கிறது என்று ஏற்கலாம். அவனுக்கும் இந்த சசிகலாவுக்கும் அப்படி என்ன உறவு? மக்கள் பணத்தைக் கோடி கோடியாகக் கொள்ளையடிப்பதில் நெருங்கிய கூட்டாளிகள்! சட்டத்துக்குப் புறம்பான சமூக விரோத அதிகார மையமாக இருந்து அரசியலை ஆட்டுவிப்பதில் பங்குதாரர்கள்! உடன்பிறவா சகோதரிகள் அடிக்கடி ஐதராபாத் போய் ஓய்வெடுத்துக் கொள்வதன் இரகசியம் இதில் அடங்கியுள்ளது.

இந்த விஷயத்தில் இன்னும் கொஞ்சம் ஆழமாகப் போய் அலசினால் தெரிகிறது; தமிழ்நாட்டு ராமசாமி உடையார், ஆந்திரா சுப்பிராமி ரெட்டி, கர்நாடக விஜய் மல்லையா, கேரள சுனில் ஆகிய சாராய அதிபர்கள் தென்நாட்டு அரசியலை எப்படி ஆட்டுவிக்கிறார்கள் என்கிற இரகசியம். பொதுவாக மக்களிடம் பரப்பப்பட்டுள்ள கருத்து என்னவென்றால் ''கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள்தான் விஷச் சாராயம் விற்கிறார்கள்; குடியால், குடிகள் கெடுவதற்குக் காரணம் இந்த சமூக விரோதிகளும், உள்ளூர் போலீசும் அரசியல்வாதிகளும் சேர்ந்து அமைத்துள்ள கூட்டணி''. இது ஒருபுறம் உண்மைதான் என்றாலும் அரசு உரிமம் பெற்றுக் கொண்டு சாராயப் பேரரசுகளை நிறுவியுள்ள சாராய அதிபர்களின் ஆதிக்கத்தால் ஏற்படும் கேடுகள் கொஞ்ச நஞ்சமல்ல.

சாராயம் காய்ச்சி விற்பது என்பது நமது நாட்டில் காலம்காலமாக நடந்துவரும் குடிசைத் தொழிலாக உள்ளது. ஏறக்குறைய எல்லாக் கிராமங்களிலும், புறநகரப் பகுதிகளிலும் இரண்டு, மூன்று குடும்பங்கள் சாராயம் காய்ச்சி விற்று வருகின்றன. கள்ளச்சாராயம் என்பது கடந்த 50, 60 ஆண்டுகளுக்குள் வந்த விவகாரம்தான். அதற்கு முன்பு சாராயம் காய்ச்சுவதற்குத் தடையும் இல்லை; பெரும் சாராய ஆலைகள் வைத்து நடத்தும் தொழிலதிபர்கள் உருவானதும், அதன் உற்பத்தி விற்பனை அரசுக்கு கலால் வரியாகத் தண்டம் வசூலிக்கும் முக்கிய மூலாதாரக வந்த பின்னர்தான், இந்த ஏற்பாட்டிற்கு வெளியிலே சாராயம் காய்ச்சி விற்பது குற்றத் தொழிலாகக் கருதப்பட்டது. மது விலக்குக் கொள்கையை வைத்து ஓட்டுப் பொறுக்குவது சாராய அதிபர்களிடம் லஞ்சக் கூட்டு வைப்பது என்கிற ஓட்டுக் கட்சிகளின் இரட்டை வேடமும் அதைக் குற்றத் தொழிலாகக் கருதும்படி செய்துவிட்டது. இருந்த போதும் வறுமையின் காரணமாக

**தமிழ் நாட்டு ராமசாமி உடையார், ஆந்திர சுப்பிராமி ரெட்டி, கர்நாடக விஜய் மல்லையா, கேரள சுனில் ஆகிய சாராய அதிபர்கள் தென்நாட்டு அரசியலை ஆட்டுவிக்கிறார்கள்.''**

படிப்பகம்

www.padippakam.com

வும், குறிப்பாக வறட்சிக் காலங்களில் விவசாய வேலைகள் கிடைக்காததாலும், நகர்ப்புற வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் பல குடும்பங்கள் சாராயம் காய்ச்சிப் பிழைக்கின்றன.

இப்படி வயிற்றுப் பிழைப்புக்காக சாராயம் காய்ச்சி விற்பதைவிடப் பெரிய அளவு கள்ளச்சாராயத் தொழிலில் புகுந்திருக்கின்றனர், வேறொரு பிரிவினர். அவர்கள்தான் உள்ளூர் அளவிலான கிரிமினல் குற்றக் கும்பல்கள். இவர்கள் உள்ளூர் அரசியல் தலைவர்கள், போலீசு அதிகாரிகளின் கூட்டாளிகளாகவோ, பினாமிகளாகவோ உள்ளனர்; சிலர் உள்ளூர் அரசியல் தலைவர்களாகி வளர்ந்து எம்.எல்.ஏ., எம்.பி.க்களாகி மந்திரிகளாகவும் உயர்ந்து விடுகின்றனர்; சென்னையில் ஜேப்பியார், மதுசூதனன் போன்றவர்கள் இப்படித்தான் உருவாகினர். இன்னும் சிலர், வீடு - வீட்டுமனை, பேருந்து - லாரி போக்குவரத்து, அரிசி ஆலை - சினிமாக் கொட்டகை, அரசு ஒப்பந்தங்கள் என்று தொழிலதிபர்களாகவும் சுயநிதிக் கல்லூரிகள் நடத்தும் கல்வியாளர்கள் - வள்ளல்களாகவும் உயருகின்றனர். அப்புறம் சமூகத்தின் மதிப்புக்குரிய தலைவர்கள் - புனிதர்களாகவும் பரிணமிக்கின்றனர்.



வயிற்றுப் பிழைப்புக்காக சாராயத் தொழிலில் செய்பவர்களைத் தாக்கியும், மாமூல் வசூலித்தும் அடக்கி வைக்கும் இந்தக் கிரிமினல் குற்றக் கும்பல்கள் தாம், ஆலைச் சாராயத் தொழிலோடு போட்டி போடுவதற்காக வேண்டி, தமது கள்ளச் சாராயத்தில் மேலும் போதை ஏற்றுவதற்காக ''விஷச் சாராய''த்தை உற்பத்தி செய்து விற்கிறார்கள். உயிருக்கே ஆபத்தான இரசாயனப் பொருட்களைக் கள்ளச் சாராயத்தில் கலக்கின்றனர். அதனால் சாராயச் சாவுகள் ஏற்படும் பொழுதெல்லாம் அரசியல் தலைவர்கள், அதிகாரிகளிடம் உள்ள தொடர்புகளைப் பயன்படுத்திக் கொண்டு தப்பித்து விடுகின்றனர்; அந்தந்த மட்டத்துக்கு மாதாமாதம் மாமூலும், குறிப்பிட்ட இலக்குக்கான வழக்குகளுக்கு ஒப்புதலும் கொடுப்பதன் மூலம் எந்தவிதத் தடங்கலும் இல்லாமல் இந்தக் கிரிமினல் குற்றக் கும்பல்கள் தமது தொழிலைத் தாராளமாகத் தொடர்கின்றனர். ஆனால் வயிற்றுப் பிழைப்புக்காக சாராயத் தொழில் செய்வோர் போலீசிடம் அடி உதைபடுவதோடு லஞ்சம், சிறை என்று தண்டிக்கப்படுகின்றனர்.

மேற்படி குற்றக் கும்பல்கள், சட்டவிரோத கள்ளச் சாராய - விஷச் சாராய வியாபாரத்தோடு, மதுவிலக்குத் தளர்த்தப்படும் அல்லது நீக்கப்படும் காலங்களில் அரசு உரிமம் பெற்றுக் கொண்டு பொட்டல சாராயமாகவும், புட்டிச்சாராயமாகவும், பிராந்திக் கடைகளாகவும் சட்டப்படி கொள்ளையடிக்கின்றனர். இந்த வகையில் சாராய ஆலை அதிபர்களுடன் கூட்டுச் சேருகின்றனர்; அவர்களின் விற்பனை வலைப் பின்னலில் பங்கு பெறுகின்றனர். தேர்தல் சமயங்களில் தனது கட்சியின் ஏகபோகப் பிரச்சாரத்துக்கு வசதியாக எதிரணியிரைத் தாக்குவது, அடிதடி கலாட்டா, கள்ள ஓட்டு, ஓட்டுச்சாவடிகளைக் கைப்பற்றுவது, வெடிகுண்டு வீசுவது, எதிரணியினர் ஓட்டு போடவிடாமல் விரட்டுவது, இலவசச் சாராய விநியோகம் என்று தேர்தல் கேலிக்கூத்தை முன்னின்று நடத்துகின்றனர். இதோடு, கூலிக்குக் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கடத்தல், தொழிலுக்குக் காப்புவரி - பஞ்சாயத்துத் தரகு போன்ற மாமூல் வசூலும் நடத்தும் ''தாதா''க்களாக செயல்படுகின்றனர்.

இதே மாதிரியான சட்டவிரோத, சமூக விரோதத் திருப்பணிகளைத்தான் சாராய ஆலை அதிபர்கள் மேல் மட்டத்தில் செய்கின்றனர். இவர்கள் வாரி இறைக்கிற கள்ளப்பணத்தில்தான் தேர்தல் நாடகம் தடபுடலாக, கவர்ச்சிமயமாக நடக்கிறது. இதில் கட்சி வேறுபாடுகளின்றித் தாராளமாக வாரி வழங்குகின்றனர். வேட்பாளர்களை நியமிப்பது, அமைச்சர்களைத் தெரிவு செய்வது, நீக்குவது, ஆட்சிகளைக் கவிழ்ப்பது, புதிய ஆட்சிகளைக் கொண்டு வருவது எல்லாமே இவர்கள் ஆணைப்படி நடக்கிறது. கர்நாடகாவில் வீரேந்திர பட்டீல் ஆட்சியைக் கவிழ்த்து பங்காரப்பா ஆட்சியைக் கொண்டு வருவதில் கோடே, மல்லையா, தாசப்பா ஆகிய சாராய அதிபர்கள் முக்கிய சூத்திரதாரிகளாக இருந்தனர். இப்போது தேவகவுடா ஆட்சியின் சாராயக் கொள்கையையும் இவர்களே தீர்மானிக்கின்றனர்.

ஆந்திராவில் சாராய எதிர்ப்பு மக்கள் இயக்கம் வலுத்ததால், மதுவிலக்கை அமுலாக்குவதாக வாக்குறுதி கொடுத்து ஆட்சிக்கு வந்த என்.டி.ஆர். அப்படியே செய்தார். உடனே ஆந்திர சாரய அதிபர் சுப்பிராமிரெட்டி அவரது கட்சியைப் பிளந்து சந்திரபாபு நாயுடுவை முதலமைச்சராக்கினார். சாராயத்தில் கொள்ளையடித்த கள்ளப்பணத்தை வைத்து அனைத்துக் கட்சிகளையும் தனது செல்வாக்கில் கொண்டு வந்தார். சாலை போடுவது, குடிதண்ணீர் வசதி செய்வது, பள்ளி - சமூகக் கட்டிடங்கள் கட்டித் தருவது என்று

**''பத்து சாராயவடி ஆலைகளின் முதலாளியும், மேல் நாட்டு மதுவகைகளின் தென்னிந்திய முகவருமான ஆந்திர காங்கிரசு எம்.பி . சுப்பிராம ரெட்டி கொல்லப்பட்டான் என்பதற்காக ஜெயலலிதாவும், சசிகலாவும் விமானத்தில் சென்று கண்ணீர் வடித்தனர்''**



படிப்பகம்

www.padippakam.com

சமுதாயத்தை கொள்ளையிட்டதில் ஒரு பகுதியை வாரி இறைத்து வள்ளல் பெயர் பெற்றான்.

மதுவிலக்குக் கொண்டு வந்தால் காந்திய உத்தமர்கள் போல பேசுகிறார்கள்; அதை நீக்கினாலும் மக்கள் நலனுக்காகத்தான் என்கிறார்கள், ''அரசு வருவாயில் அதிகபட்ச வருவாயே சாராயம்தான்; எங்கள் அரசு வேறு என்ன செய்ய முடியும்'' என்கிறார் கேரள மந்திரி பந்தலம் சுகுமாரன். ''கஜானா காலி ஆகிவிட்டது; மத்திய அரசு மானியம் கொடுத்தால் மதுவிலக்கை அமுலாக்குவோம்'' என்று சொல்கின்றன மாநிலக் கழக அரசுகள். கள்ளச் சாராயத்தையும், சாராய அதிபர்களின் கொள்ளையையும் ஒழிப்பதற்குத்தான் ''மலிவுவிலை மது'', அரசே சாராய உற்பத்தி செய்யும் என்றார் கருணாநிதி.

இவர்கள் கொள்கை எதுவாக இருந்தாலும் அது சாராய ஆலை அதிபர்களைப் பாதிப்பதில்லை. மதுவிலக்கு அமுலில் இருக்கும்போது, மருத்துவ - இரசாயனத் தேவைக்கு எரி சாராய வடிப்பு என்கிற பெயரில் சாராயம் உற்பத்தி செய்து, ஏற்கனவே உள்ள கிரிமினல் குற்றக் கும்பல்களின் வலைப்பின்னல் மூலம் விற்கின்றனர்; மதுவிலக்கு நீக்கப்பட்டுள்ள போதும் சட்டபூர்வமான லாபம் பெறுவதோடு நிற்பதில்லை. ஒவ்வொரு சாராய வடி ஆலைகளிலும் கலால் துறை அதிகாரிகள் அரசினால் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளனர். உற்பத்தி, மற்றும் விற்பனைக்கு வெளியேறும் சாராய அளவைக் கணக்கிட்டு கலால்வரி விதிப்பது இவர்களது பணி. விற்பனைக்காக எடுத்துச் செல்லும் சாராயத்துக்கு உரிய அனுமதிச்சீட்டும், வரி செலுத்திய சிட்டும் உள்ளதா என்பதைச் சோதிக்க ஆங்காங்கே சாவடிகளும் பறக்கும் படையும் உள்ளன. ஆனால் எல்லா மட்டங்களுக்கும் கிரமமாக மாமூல் கட்டிவிட்டு லாரி லாரியாக சாராயம் கடத்தி விற்கப்படுகிறது. முறைப்படி நாள்தோறும் 10 லட்சம் ரூபாய் கலால்வரி கட்ட வேண்டியிருந்தால், ஒன்று அல்லது இரண்டு இலட்சத்துக்குக் கணக்குக் காட்டி விட்டு மீதி கள்ளச் சந்தையில் விற்கப்படுகிறது.

கொடை, விஜய் மல்லையா, தாசப்பா சாராய மன்னர்கள்



இப்படிப்பட்ட கள்ளச்சாராய விற்பனை வலைப் பின்னலின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தவன் தான் சுப்பிராமிரெட்டி. இவனைச் சுட்டுக் கொன்றதற்கு பாரதீய ஜனதா முதல் போலிக் கம்யூனிஸ்டுகள் வரை சர்வகட்சியினரும் கண்டனமும் துக்கமும் தெரிவிப்பதற்குக் காரணம் இவர்கள் அனைவருக்கும் இல்லையென்னாமல் அவன் வாரி வழங்கியதுதான். இதனால்தான் இவனுக்கு வள்ளல் என்று பெயர். எந்தக் கட்சி எந்த மாநில - மத்திய ஆட்சிக்கு வந்தாலும் விலைபேசி, காரியத்தை சாதிப்பதில் வல்லவன். அதனால் அவன் சாவுக்கு பிரதமர் உட்பட சர்வகட்சித் தலைவர்களும் ரஜினி போன்ற பிரபல நடிகர்களும் குவிந்தனர். ராஜீவ் கொலை வழக்கைப்போல் சி.பி.ஐ.யின் சிறப்பு விசாரணைக் குழு அமைத்துள்ளனர். இந்தக் கள்ளச் சாராய அதிபருக்கு சிலை வைத்து தியாகியாக்குகின்றனர்.

இன்று நாடெங்கும் இப்படிப்பட்ட சாராய மன்னர்களும், அவர்களுடைய உள்ளூர் தளபதிகளும், அரசியல் தலைவர்கள், போலீசின் கூட்டுடன் நடத்தும் கள்ளச் சாராயப் பேரரசுதான் கொடிகட்டிப் பறக்கிறது. இவர்கள் தான் கோடிக் கணக்கான உழைக்கும் மக்களின் வாழ்க்கையைப் பறிக்கிறார்கள். குடிகாரக் கணவர்களால், பெற்றோர்களால் அப்பாவிப் பெண்களும் குழந்தைகளும் பட்டினிக் கொடுமைக்குப் பலியாகின்றனர் (கண்ணீரும் கம்பலையுமாக உற்றார் உறவினர்களை விஷச் சாராயத் தூக்குப் பலி கொடுத்து) அனாதரவாக நிற்கின்றனர்.

**''கடந்த மூன்று மாதங்களில் சாத்தூரில் 50 பேரும் திருச்சியில் 50 பேருமாக நூறு பேரைக் காவுக்கொண்டது விஷச்சாராயம்'' குற்றவாளிகள் யார்?**

ஆனால் கள்ளச் சாராயப் பேரரசை நடத்துபவர்களும், மாமூல் வசூலிக்கும் போலீசும், கப்பம் பெறும் ஆளும் கட்சிப் பிரமுகர்களும், எம்.எல்.ஏ., எம்.பி.க்களும், மந்திரிகளும் முதல்வர்களும் உல்லாச வாழ்வில் திளைக்கின்றனர். இப்படிப்பட்ட சமூக விரோத கும்பல்களைப் பிடித்து மக்களே நேரடியாகத் தண்டிக்க வேண்டும். புரட்சிகர அமைப்புகள் அதற்குத் தலைமையேற்கவும் வேண்டும். நாட்டின் அரசியல் அமைப்பு முழுவதுமே கிரிமினல் மயமாகிவிட்ட பிறகு வேறென்ன வழி இருக்கிறது!

• சாத்தன்

திருச்சி:

## சாராயப் படுகொலைக்கு எதிரான போர்க் குணமிக்கப் போராட்டம்

திருச்சி நகர மக்கள் விஷச் சாராயச் சாவின் துயரச் செய்தியுடன்தான் 'புத்தாண்டை' எதிர்கொண்டார்கள். இறந்தவர்கள் 13 பேர் என்பது அரசு கூறிய வடிகட்டிய பொய். டிசம்பர் 30-ந் தேதி சம்பவத்துக்குப் பின் இறந்தவர்கள் 30 பேர்; இதற்கு முந்தைய வாரங்களிலும் பலர் இறந்துள்ளனர்; இவர்களையும் சேர்த்தால் 50-க்கும் மேற்பட்டவர்கள் இறந்திருக்க வேண்டும். கண் பார்வை மங்கி மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களோ எண்ணற்றவர்கள்.

சம்பளத்திற்குச் சாராயம் விற்ற மூன்று பெண்களையும் ஒச்சதேவன் என்கிற சாராய வியாபாரியையும் கைது செய்து, இவர்கள்தான் குற்றவாளிகள் என நாடகமாடுகிறது போலீசு. உண்மைக் குற்றவாளியும் கள்ளச் சாராய பெரும்புள்ளியுமான ''சகாதேவன் மகாதேவன்'' ஆகியோரை போலீசு கைது செய்யவில்லை. இக்கும்பலுக்குப் பக்கபலமாக இருக்கும் போலீசு மற்றும் அரசியல்வாதிகள் பற்றிச் சலனமே இல்லை.

மூன்று கீழ்நிலைப் போலீசு அதிகாரிகளைத் தற்காலிக பணிநீக்கம் செய்துவிட்டு ஏய்க்கிறது,



படிப்பகம்

www.padippakam.com

போலீசு துறை. கள்ளச்சாராயப் பேர்வழிகளிடம் சதவிகிதக் கணக்கில் மாமூல் வாங்கும் ''ஐ.ஜி., டி.எஸ்.பி., எஸ்.பி.,'' போன்ற போலீசு உயரதிகாரிகள் மீது கண்துடைப்பு நடவடிக்கைகூட எடுக்கப்படுவதில்லை என்பதே வழமை.

சாராயக் கிரிமினல் கும்பல், போலீசு, அரசியல்வாதிகள் மூவரும் இணைந்த கூட்டணி செய்த படுகொலைதான் இச்சாராயச் சாவு. இக்கும்பல் மீதான நடவடிக்கையை மக்கள் தவிர வேறு யாரும் எடுக்க மாட்டார்கள் என்பது தெளிவு. எங்கெல்லாம் மக்களே கொந்தளித்துத் திரண்டு போய், சாராயப் பானைகளை உடைத்து, சாராயக் கிரிமினல்களை அடித்து விரட்டுகிறார்களோ அங்கெல்லாம் இக்கூட்டணி தமது சமூக விரோத செயல்பாட்டைக் கடைவிரிக்க அஞ்சுகிறது.

சாராயக் கிரிமினல் பேர்வழிகளுடன் ஏதோ ஒரு வகையில் உறவு கொண்டிருப்பதால் எந்த ஓட்டுக்கட்சித் தலைமையும் இப்பிரச்சினைக்கு எதிரான போராட்டங்களை நடத்த முன் வரவில்லை. மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, பெண்கள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் சாராயப் படுகொலைக்கு எதிராக இயக்கம் மேற்கொண்டன.

8.1.96 அன்று உறையூரில் கண்டனப் பேரணியுடன் பொதுக்கூட்டம் நடத்தியது, மக்கள் கலை இலக்கியக் கழகம். கோகினூர் திரையரங்கிலிருந்து புறப்பட்ட பேரணி முக்கிய சாலை, தெருக்கள் வழியாக நாச்சியார் கோவில் பேருந்து நிறுத்தத்தில் அமைக்கப்பட்ட பொதுக் கூட்ட மேடையை வந்தடைந்தது. பொதுக் கூட்டத்தில் தோழர்கள் காளியப்பன், தமிழ்மணி உரையாற்றினார்கள். எந்த கட்சிக்கும் இல்லாத அளவிற்கு உறையூர் மக்கள் சுமார் 3000 பேர் பொதுக்கூட்டத்தில் கூடி நின்று ஆதரித்தனர்; தாராளமாக நிதியுதவி செய்தனர்.

பேரணியின் முகப்புப் பகுதியில் சாராயக் கிரிமினல், போலீசு, அரசியல்வாதியாக வேடமிட்ட மூவரைப் பொதுமக்கள் கயிறுகட்டி இழுத்துச் செல்வது போல் அமைக்கப்பட்டிருந்த காட்சி மக்களைப் பெரிதும் கவர்ந்தது. பொதுக்கூட்ட மேடையில் நடத்தப்பட்ட வீதி நாடகமும், கலைநிகழ்ச்சிப் பாடல்களும் மக்களிடம் சிறந்த வரவேற்பைப் பெற்றன. பாதிக்கப்பட்ட பகுதிகள் அனைத்திலும் இவ்வீதி நாடகம் நடத்தப்பட்டது. ''நாம் முயற்சி எடுத்தால் கள்ளச்சாராயக் கும்பலை பகுதியிலிருந்து விரட்ட முடியும்'' என்ற நம்பிக்கையை இவ்வியக்கம் மக்களுக்குக் கொடுத்தது.

### பெண்கள் விடுதலை முன்னணி

கள்ளச் சாராயத்தைத் தடுக்கக் கோரியும் பிற மதுவகைகளைத் தடை செய்யக் கோரியும் பெண்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து திருச்சி நகரில் பல போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். 27.12.95 அன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்திய சூடு தணிவதற்குள்ளாகவே இந்த விஷச் சாராயப் படுகொலைகள் நிகழ்ந்ததால் மீண்டும் போராட்டக் களத்தில் இறங்கினர். ''சாராயப் படுகொலைக்குக் காரணமான குற்றவாளிகளைத் தூக்கிலிடு; இறந்தவர்களின் குடும்பத்திற்கு 1 லட்சம் ரூபாய் நிவாரணம் கொடு'' என்று கோரி, 10.1.96 அன்று மத்தியப் பேருந்து நிலையம் அருகில் பெ.வி.மு.வினர் 50 பேர் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

### புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி

திருச்சி - அரியமங்கலம் பகுதியில் கள்ளச் சாராயத்தை முற்றாக ஒழிக்க அப்பகுதி புரட்சிகர மாணவர் இளைஞர் அணியினர் போராடி வருகின்றனர். இதையொட்டி வைக்கப்பட்ட விளம்பரத் தட்டியை சாராய ரவுடிகள் திருடிச் சென்றதுடன், அதனைத் தட்டிக் கேட்டதற்காக அப்பகுதிச் செயலர் தோழர். சூர்யாவை நேருஜி நகர் மதி, காந்தி, திடீர் நகர் சந்திரன் ஆகிய சாராய ரவுடிகள் 29.12.95 அன்று தாக்கவும் செய்தனர்.

இவற்றுக்கெல்லாம் அஞ்சாமல் போராட்டம் தொடர்ந்தது. காவல் துறைக்குப் புகார் கொடுத்ததால் நெருக்கடிக்கு உள்ளான போலீசார் அவர்களை வேறு வழியின்றி கைது செய்தனர். இதனால் 'கவுரவம்' இழந்த சாராய ரவுடிகளின் அடியாட்கள் ஆயுதங்களுடன் வந்து தோழர்களை மிரட்டினர். பிறகு நள்ளிரவில் யாருமில்லாத நேரத்தில் கிளைச் செயலருக்கு சொந்தமான சூர்யா ஆட்டோ ஒர்க்ஸ் கடைக்குத் தீ வைத்தனர். எல்லா ரவுடித்தனங்களையும் திரைமறைவிலிருந்து போலீசு தூண்டிவிட்டுக் கொண்டிருந்தது.

சாராயப் படுகொலையை எதிர்த்து
திருச்சியில் ம.க.இ.க. - பு.ம.இ.மு. பொதுக் கூட்டம்



இதைக் கண்டித்து 12.1.96 அன்று அரியமங்கலம் எஸ்.ஐ.டி பாலிடெக்னிக் கல்லூரி அருகில் பு.மா.இ.மு. சாலை மறியல் போராட்டம் நடத்தியது. அரை மணிநேரம் போக்குவரத்து நின்று போனது. 10 பெண்கள் உட்பட 46 பேரைக் கைது செய்த போலீசு, ஆத்திரத்தில் திட்டமிட்டே பிணையில் வெளிவர முடியாத பிரிவுகளின் கீழ் பொய் வழக்குப் போட்டது; பு.மா.இ.மு. தோழர்களைப் பிணையில் விடுவிக்கக் கோரி போடப்பட்ட வழக்கறிஞரின் மனுவைப் பரிசிலித்த நீதிபதி சட்டத்தில் வாய்ப்பிருந்தும் பிணை தர மறுத்துவிட்டார். கிளைச் சிறையில் அடைக்கப்பட்ட தோழர். கல்யாணியின் தந்தை உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டதால் அவரைப் பார்த்துவரக் கோரியதையும் பொறுப்பு நீதிபதி ஏற்காமல் அனுமதி மறுத்துவிட்டார். போலீசு மட்டுமல்ல, நீதிமன்றமும் சாராயக் கிரிமினல்கள் பக்கம் தான் என்பதை இச்சம்பவம் நிரூபித்தது.

தகவல்: ம.க.இ.க.,
பு.மா.இ.மு. - திருச்சி

படிப்பகம்

www.padippakam.com

# சாயி பாபா:

# ஆண்டவனுக்குத் தரகனா? ஆள்பவருக்குத் தரகனா?



புதிய பொருளாதாரக் கொள்கையின்படி அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் துறைகளுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளித்து முன்னேற்ற துடியாய் துடிக்கிறது அரசு. பழைய பொருளாதாரக் கொள்கையின் படியே இந்தப் பலன்களை அனுபவித்து வரும் முக்கியப் புள்ளி சத்திய சாய்பாபா. மறுமைக்கு வழிகாட்டும் பக்தி மார்க்கத்தை, கேவலம் அழியக் கூடிய செல்வத்தைச் சேர்க்கக் கூடிய தொழில்துறையோடு இணைத்துப் பேசுவதா என்று ஆச்சரியத்தோடு கேள்வி கேட்பவர்களுக்கு, சாயி அறக்கட்டளையின் 'இம்மையின்' இருப்புக் கணக்கையும், அந்நிய செலாவணி வரவையும் அலசிப் பார்த்தால் விடை கிடைக்கும்.

முப்படைகளின் தளபதி முதல், அரசியல்வாதிகள், முக்கிய வர்த்தகப் புள்ளிகள் வரை ஒன்று கலக்கும் 'திரிவேணி சங்கமமாய்' சாட்சியளிக்கும் புட்டபர்த்தி, இதுதான் நிலைமை என்று கணிக்க முடியாதபடி தரகர்களின் தலை நகரமாகவே விளங்குகிறது.

'தன்னைப் பின்பற்றத் துடிக்கும் சீட கோடிகளுக்கு சாயிபாபா வழங்கும் உள்ளார்ந்த அருளுரை இது, ''எனது வாழ்க்கைதான் நான் வழங்கும் செய்தி.'' பாவம் இந்தச் செய்தியை தனது தொண்டர்களுக்கு தொழில் சுத்தமாக வழங்க முடியாமல் சி.பி.ஐ-ன் ஹவாலா மோசடி வழக்கில் சிக்கி தலைப்புச் செய்தியில் தவித்துப் போயிருக்கிறார்கள் அர்ஜுன் சிங்கும், அத்துவானியும். இதுபோன்ற நடவடிக்கைகளில் சாயிபாபாவிடம் முறையாகப் பயிற்சி பெற்ற நரசிம்மராவ், வாஜிபேயி போன்ற முன் அனுபவமுள்ள 'மூத்த தலைமை' தேவை என்பது மீண்டும் நிருபணமாகியுள்ளது.

அறக் கட்டளைப் போர்வையில் வரி ஏய்ப்பு, ஆசிரம சேவை என்ற பெயரால் நிலக் கொள்ளை, அயல்நாட்டு நன்கொடை சாக்கில் அந்நிய செலாவணி மோசடி என்ற அனைத்து விவகாரங்களையும் தனது 'மாயக் கவர்ச்சியால்' சரிகட்டி அற்புதங்களில் அரசியல் அமைப்பையே விஞ்சி நிற்கிறார் சாயிபாபா. கட்சி பேதமின்றி அரசியல்வாதிகள் அதிகாரிகள் சாயிபாபாவின் - 'தாள்' பணிவதன் இரகசியம் இதுதான்.

அற்புதங்கள் எனும் பெயரில் (வெறுங்கையில் விபூதி வரவழைதல், தலைமுடிக்குள்ளிலிருந்து கைக் கடிகாரம் வரவழைத்தல், வாயிலிருந்து லிங்கம் வரவழைத்தல்) சாயிபாபா நிகழ்த்தும் மோசடிகளை டாக்டர் கோவூர், டாக்டர் நரசிம்மையா, பி.பிரேமானந்த், நாத்திகம் இராமசாமி போன்றோரும் பகுத்தறிவாளர்களும் ஏற்கனவே அம்பலப்படுத்தியுள்ளனர்.

ஆனால் சாயிபாபாவே கூறுவதுபோல வெறும் வித்தை காட்டுதல், அற்புதங்களை நிகழ்த்தி தெய்வ பக்தியை வளர்த்தல் என்பது பாபாவின் முக்கியக் குறிக்கோள் அல்ல என்பது தெளிவாகிறது. 'மண்ணை விண்ணாக்கும்' மகத்துவ சக்தி கொண்டு அரசியல் பேரங்களின் தலைமைச் செயலகமாகவும் அதிகார வர்க்கத்தின் தரகு நிலையமாகவும், பிரசாந்தி நிலையத்தை வளர்ப்பதே பாபாவின் அவதார நோக்கம்.

''எனது செயல்கள்தான், எனது பணிகளையும் நான் வந்துள்ள வேலைகளையும் நிர்மாணிக்கும் அஸ்திவாரமாகும்'' எனும் பாபாவின் வாய்மொழியிலிருந்தே, இந்த அவதாரம் புட்டபர்த்தியில் எதை நிர்மாணிக்க அலைகிறது என்பதை நம்மால் விளங்கிக் கொள்ள முடியும். இப்படி தந்திர வேலை காட்டி, மாயக் கவர்ச்சியால் மக்களை மயக்குபவர் அல்ல எங்கள் 'ஜகத்குரு' என்று பீற்றிக் கொள்ளும் காஞ்சி மடத்தின் கமுக்கமான கதையும் இதுதான். பற்றற்றவர்கள் போல் பாவனை காட்டி மட்டற்ற செல்வக் கொழுப்பில் தங்கக் காசில் குளிப்பதும், உள்நாட்டு அரசியலில் 'நம்மவாளை' தேர்தலில் நிறுத்துவதிலிருந்து, சாராய வியாபாரிகளுக்கு ஆசி வழங்குவது வரை, சின்னவாளும், பெரியவாளும் சாயிபாபாவுக்கு சற்றும் குறைந்தவர்களல்ல என்பதை நிரூபித்துள்ளார்கள்.

ஆந்திரத்தில் உள்ள ஒரு சிறிய நகரான புட்டபர்த்தி இன்று இந்தியாவின் பணக்களஞ்சியமாக மின்னுகிறது. 'ஓசையற்று, உள்ளொடுங்கிய ஆன்ம பலம் வேண்டும் இடம்' என வருணித்துக் கொள்ளப்படும் சத்திய சாயி தியான இயக்கத்தின் மத்திய இடமான புட்ட பர்த்தியைச் சுற்றி இன்று தொழில்கள் சூடு பிடித்துள்ளன. சாய் தங்குமிடம், சாய் வீட்



படிப்பகம்

www.padippakam.com

டுமனை, சாய் உணவு விடுதி என்று நட்சத்திர அந்தஸ்தில் 'ஆன்மீகம் பலம்' கட்டிடங்களாய் 'காண்ட்ராக்டுகளாய்' விரிந்து கொண்டு இருக்கிறது.

பக்தி சேர்ந்து போனதால் முக்தியைத் தேடி வீடு, சுற்றம், செல்வங்களைத் துறந்து கோவணத்துடன் போன பட்டினத்தாரைப் போல ஏமாளி அல்ல, சாயிபாபா. பக்தி பெருகி வங்கியில் நிறைய, நிறைய பக்கத்தில் தனது சகோதரன் ஜானகிராமய்யாவை சாயி அறக்கட்டளைக்குப் பொறுப்பாக்கி சொத்துக்கள் பெருக, பெருக, முடி வளர்க்க ஆசைப்பட்டவன், பேன் வளர்த்த கதையாய், தனது பனங்காய் தலைக்குள்ளிருந்து கடிகாரத்தையும், செயினையும், பக்தர்களுக்கு எடுத்துக் கொடுத்த பாபாவே அதிசயிக்கும் படி, கத்தி ஒன்று வயிற்றுக்கு வந்தது. சத்யசாயி ஆசிரம உறுப்பினர்கள், மாணவர்களே பாபாவைத் தாக்க வந்தது பார்வையாளர்களுக்கு ஆச்சரியத்தை அளித்தது. இந்த சம்பவத்தின் போது 6 பேரில் இரண்டு நபர்களை சீடர்களே கொன்றனர். நான்கு பேரை காவல்துறை கொன்று பழி தீர்த்தது. இதன் மூலம் பிரசாந்தி நிலையத்தின் கோஷ்டி பூசல், எதிராளிகளை அடித்துக் கொல்ல குண்டர் படை இருப்பது, நிர்வாக ஊழல்கள் என சத்யசாயியின் 'தெய்வீக ரகசியங்கள்' உலகுக்கு அம்பலமானது.

அரசு நிர்வாகமும், சாயி அறக்கட்டளை நிர்வாகமும் வழக்கை விட, சாயிபாபாவின் பெயர் கெட்டு விடக் கூடாது என்பதிலேயே கவனமாக இருந்தது தெய்வாதீனத்தின் குட்டு உடைந்தால், பரவாயில்லை புதிய அற்புதங்களை நிகழ்த்தி மீட்டுக் கொள்ளலாம், சம்பாத்யத்தின் சூத்திரம் வெளித் தெரிந்தால் நல்ல வியாபாரிக்கு அழகல்ல பாபாவும் அப்படித்தான் தனது ஆன்மீக பவுசை விட அறக்கட்டளை பவுசை பாதுகாக்க அரசின் உதவியுடன் விசயத்தை மூடி மறைத்தார்.

'பார் எனக்கு உலகெங்கும் சீடர்கள்'' என ரஜனிசைப் போலவோ - சொன்னதைச் செய்தேன் பார்' என்று சந்திராசாமியைப் போலவோ ஆரவாரிப்பதில்லை பாபா. சத்யசாயி சேவை மையம் 22 நாடுகளில் இருந்தும், ஒரே ஒரு முறைதான் வெளிநாடு போயிருக்கிறார் சாயிபாபா. புட்டபர்த்தியின் புன்முறுவலில் உலகெங்கும் அறுவடை.

கொலை முயற்சி சம்பவத்திற்கு பிறகு பாபாவின் வியூகமும் மாறியது. தன்னைச் சுற்றி நல்லெண்ணத்தை உருவாக்க பலவாறு முயற்சித்ததன் தொடர்ச்சியாய் அனந்தபூர் மாவட்டத்தில் நீண்டகால தண்ணீர் வழங்கும் பணியை 3.8 மில்லியனில் மக்களுக்கு வழங்கியிருக்கிறது. 11 நகரங்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யுமளவுக்கு இத்திட்டம் அமைந்துள்ளது. ஒரு வேளை அனந்தபூர் மாவட்டத்திற்கு குடிநீர் வசதி செய்து தருவேன் என்று வாக்குறுதி கொடுத்து தேர்தலில் வெற்றி பெற்ற நரசிம்மராவுக்கு இது கூட்டாளியின் பிறந்த நாள் பரிசாயிருக்கலாம். ஆனால் இதில் உள்ளூர் கல்கி, ஆனந்தவிகடனிலிருந்து துப்பறியும் அரசு நிறுவனங்கள் வரை ஆண்டுக்கு பல கோடி அந்நிய செலாவணியைச் சம்பாதிக்கும் பாபாவின் பாங்குச் சந்தையை கணக்கு கேட்காமல், 'ஆகா, வள்ளலே, மனித நேய மகானே'



என்று பாபாவின் பக்தி சந்தைக்குள் புகுந்து கொண்டு புகழாரம் சூட்டுகின்றனர்.

பாபாவின் திட்டப்படி ''தற்போது யாரும் பாபாவைக் கிண்டல் செய்ய முடியாது. இது வரை அனந்தபூர் மாவட்டத்து மக்கள் ஒருபோதும் பாபாவைப் புகழ்ந்தது இல்லை. ஆனால் குடிக்க தண்ணீர் தந்து நல் வாழ்வு திட்டத்தை அரங்கேற்றியதன் மூலம் இப்போது அவரை யாரும் விமர்சிப்பதில்லை. நடுநிலையில் உள்ளார்கள். புட்டபர்த்தியில் உள்ள சத்தியசாயி மருந்துவமனையில் இதய அறுவை சிகிச்சை கூட இலவசமாக செய்யப்படுகிறது. உலகின் சில பெரிய மருத்துவர்கள் கூட இங்கு வேலை செய்கிறார்கள்'' என்று 'பாபாவின் நல்வாழ்வு' திட்டத்தின் விளைவைக் கூறுகிறார் அனந்தபூர் கம்யூனிஸ்டு கட்சி எம்.எல்.ஏ.கே. இராமகிருஷ்ணன். இப்படி உள்ளூர் மக்களுக்கு தண்ணி காட்டியதன் மூலம், சிலருக்கு கடவுளாய் காட்சியளித்த பாபா இன்று மக்களுக்குச் சேவகராய் நெருக்கமாகிவிட முயற்சிக்கிறார்.

வரவு செலவை ஒழுங்கமைப்பதும், அதிகாரத் தரகு வேலையை நிர்வகிப்பதுமே பெரிய வேலையாய்ப் போனதால் சில வருடங்களாக பாபா எந்தவொரு அதிசயத்தையும் நிகழ்த்திக் காட்டவில்லை, அதற்கு பதிலாக உள்ளூர் ஆதரவோடு பிரசாந்தி நிலையத்தில் தங்கும் வசதி, உணவு வசதி போதாது என, நிலத்தரகர்கள், சிறு விவசாயிகளிடமிருந்து நிலத்தை வாங்கி குளிர்சாதன வசதியுடைய புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. சத்தியசாயி மையம் 4,000 கோடி ரூபாய் செலவில் பிரசாந்தி நிலையத்தில் கட்டப்படுகிறது. 150 ஏக்கரில் வீடு, உணவு விடுதி, அலுவலகம், வெளிநாட்டினை ஒத்த பூங்கா, கடைகள் என வகை வகையாக ஆதிகேசவலு என்ற சுங்கத்துறை அதிகாரி தலைமையில் கட்டப்படுகிறது.

**சாயிபாபாவின் காலடியில் அல் - சேஷன்**

இப்படி எல்லா வகையிலும் 'பிழைப்பு நடத்த' இடமிருப்பதால் தான் சாய் தியான இயக்கம், ஒரு தேசங்கடந்த இயக்கமாக விரிகிறது. பக்தகோடிகளை, வாடிக்கையாளர்களாக மாற்றியதே பாபாவின் 'ஞானம்' என்றால் மிகையில்லை. கள்ளச்சாராயத்தின் வளர்ச்சியை காவல்துறை விரும்புவதுபோல, பாபாவின், சத்யசாயி இயக்கத்தின் வளர்ச்சியை அதன் 'மாமூலான' பக்தர்கள் சங்கர் தயாள் சர்மா, நரசிம்மராவ், டி.எம்.சேசன், நீதிபதி பி.என். பகவதி, சுனில் கவாஸ்கர் போன்ற மேட்டுக்குடி ஒட்டுண்ணி கும்பலும் விரும்பி வரவேற்கிறது.

எந்த தொழிலபதிர் வணங்கினாலும் தொழில் விருத்தியடைகிறதாம்! கர்நாடக சாராய அதிபதி விஜயமல்லையா சாராயம், பிறகு மல்லய்யா மருத்துவமனை என அபிவி

படிப்பகம்

ருத்தி ஆகியுள்ளார். இப்படி எண்ணியதை நிவர்த்திக்கும் பழைய பஞ்சாங்கமாக மட்டும் பாபாவைக் கருத முடியாது, விஜய மல்லய்யாவுக்கும், அப்பல்லோ மருத்துவமனை டாக்டர் பிரதாப் ரெட்டிக்கும் தொழில் சண்டை வந்த போது அதைச் சமரசமாக்கி, தீர்த்து வைத்த நம்பகமான தரகராகவும் பாபாவின் பணி வளர்ந்துள்ளது. இதுமட்டுமா? பிரதமர் ராவுக்கும், தேர்தல் அதிகாரி சேசனுக்கும் எழுந்த முரண்பாட்டையும் பாபாவின் பயிற்சி பெற்ற புன்னகையே தீர்த்து வைத்தது.


இப்படி பாராளுமன்ற ஊழல் சாக்கடையின் பன்றி அவதாரமாக விளங்கும் சாய்பாபாவின் பரம பக்தர்களில் பாரதிய ஜனதாவின் வாஜ்பேயி, முரளி மனோகர் ஜோஷி, விசுவ இந்து பரிசத் அசோக் சிங்காலும் அடங்குவர். கனவு காணும் இந்து ராச்சியத்தை கமுக்கமாக நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கும் பாபாவே இராமனின் அவதாரம் என்று பஜனை பாடினாலும் வியப்பில்லை.

இப்படி கட்சி பாகுபாடற்ற பெருந்தலைவர்களை புட்டபர்த்திக்கு வாடிக்கையாளராக்கியதன் மூலம், ஓரினச் சேர்க்கையாளன், ஒழுக்கக்கேடானவன், மோசடி வித்தைக்காரன் என்பவைகளை எடுபடாமல் ஆக்கி இவர்களுக்கும் சேர்த்து வழிகாட்டும் சமூக சேவகர் என்ற கருத்தை மறைமுகமாக அரசும், அதிகார வர்க்கமும் மக்களிடம் உண்டாக்க முனைகிறது. இதன் வெளிப்பாடுதான் நவம்பர் 23, 1995 சாயிபாபா தனது பிறந்தநாள் கொண்டாட்டத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடிய போது, அதை தமது கொண்டாட்டமாகவே கருதி பல கட்சி பிரமுகர்களும், அரசு அதிகாரிகளும் அணிவகுத்து வந்தனர்.

சாயிபாபா தங்க சிம்மாசனத்தில் உட்கார, ஹெலிகாப்டரில் பூமழை பொழிய, 122 நாடுகளின் பக்தர்கள் ராணுவ மிடுக்கில் கொடி பிடித்து நடக்க, மன்மோகன் சிங் ஒரு பக்கம், உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு மறுபக்கமாய் அரசு விழா போல பாபா பவனி வந்தார். சீடர்கள் 160 கோடி காணிக்கையாக செலுத்தினர். இதில் 13 கிலோ தங்கமும் அடக்கம். எஸ்.கே. இண்டர்நேசனல், கே.டி. இண்டர்நேசனல், மெடிகல் பவுண்டேசன் எனும் இரு நிறுவனங்களும் சேர்ந்து 30 மில்லியன் அமெரிக்க டாலர்களை காணிக்கை தந்துள்ளனர்.

மக்களைப் பார்த்து ''சிக்கனமாய் இருங்கள்'' என்று உபதேசிக்கும் நிதியமைச்சர் மன்மோகன்சிங், இந்த ஊதாரியின் ஆடம்பர ஊர்வலத்தில் செல்லப் பிராணியாய் பக்கத்தில் வந்ததன் இரகசியம் இதுதான் - ''இந்தியாவுக்கு மட்டுமல்ல, இனி பாபாவுக்கும் டாலரே மோட்சம்''. கொண்டாட்டத்தில் சாயிபாபாவுக்கு சூட்டப்பட்ட தங்க முடியும் ஏலத்துக்கு விடப்பட்டு அதைவிட இருமடங்கு விற்று, பணம் அறக்கட்டளைக்குப் போய்ச் சேர்ந்தது.

இப்படி அறக்கட்டளை, கல்வி நிலையங்கள் எனும் பெயரில் சத்ய சாயி இயக்கத்துக்கு 150 வங்கி



**புட்டபர்த்தி:**

**கடத்தல் பேர்வழிகள், அந்நியச் செலாவணி திருடர்கள், சாராய மன்னர்கள் போன்ற வி.ஐ.பி பக்தர்களுக்காக பாபா உருவாக்கி வரும் சொர்க்கம்**

கணக்கு உள்ளது. எல்லாவற்றிலும் கோடி, கோடியாய், பணம் புரள்கிறது. இருந்தும், நாம் கற்பனை செய்வது போல சத்யசாயி ஆசிரமம், அங்கு வருவோர் யாருக்கும் இலவசமாக உணவு வழங்குவதில்லை. அங்குள்ள உணவுக் கூடத்தில் சாப்பாடு விலை 6 ரூபாய். ஒருமுறை ஒரு கூப்பன் வாங்கிவிட்டு அந்த தட்டிலேயே தன் குழந்தைக்குச் சோறூட்டிய பெண்ணை, சேவாதள தடியர்கள் கடுமையாக எச்சரித்து, ஒரே தட்டில் இருந்து உணவு எடுத்து பரிமாறக் கூடாது, குழந்தைக்கு வேறு கூப்பன் வாங்கி வா என விரட்டினர். இதை நினைவு கூர்வது பொது மக்களில் ஒருவர் அல்ல, சத்யசாயி சேவாதள் பெண் உறுப்பினர். உறுப்பினர்களுக்கே இந்தக் கதி எனில் பக்தர்களுக்கு பாபாவின் 'தர்ம' அடி நிச்சயம்.

மொத்தத்தில் ஒரு வெற்றிகரமான வியாபார நிறுவனம் போல் நடக்கிறது சத்யசாயி அறக்கட்டளை. இல்லாவிட்டால் பக்தியைப் பரப்ப கொடைக்கானலில் பெரிய விடுதியும், புட்டபர்த்தியிலும், பெங்களூரிலும் அறக்கட்டளை நிர்வாக அலுவலகமும் அமைய முடியுமா?

இந்திய ஜனநாயகத்தின் மதச் சார்பற்ற பரந்த மனநிலையின் ஒரு சிறந்த வெளிப்பாடுதான் சாயி பாபா. அற்புதங்களின் மூலம் ஆள் திரட்டி, பொருள் குவிக்கும் வேட்டையில் புகுந்து புறப்பட்ட சாய்பாபாவின் நோக்கமும், அதிகார வர்க்க, அரசியல்வாதிகளின் நோக்கமும், சாயி பக்தி இயக்கத்தின் 'தியான வேட்கையில்' ஒரு முகப்படுவதால், கதி மோட்சத்தில் கலக்கிறார்கள் இரு தரப்பினரும்.

சிருங்கேரி, காஞ்சிமடம், அரசியல் தரகன் சந்திராசாமி போன்ற விதம்விதமான தரகர்களைப் போலவே, சாயி அறக்கட்டளையை ஒரு அதிகார தரகு நிலையமாக வைத்து, காவித்திரைக்குள் கணக்கு, வழக்கு பார்க்கிற மொத்த வியாபாரி தான் சாயிபாபா என்பதை, பாபாவின் செயல்கள் வெட்ட வெளிச்சமாக்குகின்றன.

இரண்டு முறை ஹார்ட் அட்டாக்கும், கத்தி குத்து மிரட்சியும் பாபாவைத் தாக்கிய பிறகும், தனக்கு அழிவே கிடையாது, ''நான் சிருதி சாய்பாபாவின் மறு அவதாரம்'' என்று தனது மோசடிக்கு ஒரு பாரம்பரியத்தைத் தேடிக் கொண்ட பாபா, மேற்கொண்டு, ''தொண்ணுத்தாறு வயது வரைக்கும் நான் உயிரோடு இருப்பேன். அதற்குப் பிறகு மாண்டியா மாவட்டத்தில் (கர்நாடகம்) பிரேம் சாய் என்ற பெயரில் மறு அவதாரம் எடுப்பேன்'' என்று முன் ஜாமீன் மாதிரி பக்தர்களுக்கு விண்ணப்பித்தும் இருக்கிறார்.

இந்த இழிபிறவிகளின் உயிர், நிலவும் ஆட்சியதிகாரத்தின் அஸ்திவாரத்தில் இருக்கிறது என்பதை மக்கள் புரிந்து கொண்டால், மறு அவதாரங்களுக்கு இனி வேலையில்லை.

● துரை. சண்முகம்



படிப்பகம்

www.padippakam.com

தேவதாசி முறை:

# நியாயப்படுத்தும் குற்றவாளிகள்

ஜெகன்னாதபுரி. தீண்டாமையை ஆதரித்தும், பெண்கள் வேதம் படிக்கக் கூடாது என்றும், இன்று வரை குரலெழுப்பித் திரியும் பூரி சங்கராச்சாரியின் திருத்தலம்.

இவ்வூர்க் கோயிலின் தெய்வமான பூரி ஜெகன்னாதருக்கு விமரிசையாக நடத்தப்படும் நாபகலிபார் என்ற திருவிழா 18 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த வருடம் கொண்டாடப்பட இருக்கிறது. இவ்விழாவில் ஜெகன்னாதருக்காகக் கதறி அழுது, 10 நாட்கள் விதவையாக வாழும் சடங்கு ஒன்றிற்கு தேவதாசிகள் தேவை. கோவிலின் கடைசி தேவதாசியான கோகிலப்பிரபா 1993-ல் மறைந்த போது தனக்கென்று வாரிசாக யாரையும் நியமிக்கவில்லை. தற்போது உயிருடன் வாழும் பரஸ்மணி, சசிமணி என்ற முன்னாள் தேவதாசிகளும் வாரிசுகள் யாரையும் நியமிக்காமல், கோவில் சேவைகளிலிருந்தும் விலகி வாழ்கின்றனர்.

இப்படி தேவதாசிகள் இல்லாமல் போனால் நாபகலிபார் திருவிழாவை எப்படி நடத்துவது — பழி பாவத்துக்கு அஞ்சிய கோவில் நிர்வாகம் உடனடியாக வேலையில் இறங்கியது. பதிவேடுகளைப் புரட்டியது. 1988-ஆம் ஆண்டில் கஜால் குமாரி ஜெனா என்ற பெண்ணும், அவாது சீடர்களான ஏனைய நான்கு பெண்களும் தேவதாசி சேவைக்கு விண்ணப்பித்திருந்தனர். தூசி தட்டிய விண்ணப்பங்களை 7 ஆண்டுகளுக்குப் பிறகு கையிலெடுத்த நிர்வாகம் ஐவரையும் நேர்காணலுக்கு வருமாறு அழைத்தது.

செப்டம்பர் 11 நேர்காணலுக்கு வந்த பெண்களும், கோவில் நிர்வாகமும் அங்கு குவிந்திருந்த பத்திரிகையாளர்களை எதிர்பார்க்கவில்லை. அவர்களது கேள்விகளுக்கும் பதிலளிக்க முடியவில்லை. தொடர்ந்து ஒரு வார காலமாக பல்வேறு பெண்கள் அமைப்புகள், பத்திரிக்கைகள், சில அரசியல் கட்சிகள் என வெளி உலகின் கண்டனங்களை சந்திக்க நேர்ந்த பூரி கோவில் நிர்வாகம் வேறு வழியின்றி முடிவெதுவும் எடுக்காமல் அமைதி காத்து வருகின்றது.

o o o

இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை தேவதாசிகள் இல்லாத கோவில்களே தென்னிந்தியாவில் இல்லை எனலாம். இராசராச சோழன் காலத்தில் தஞ்சை பெரிய கோவிலில் மட்டும் 400 தேவதாசிகள் இருந்ததாக தெரிய வருகின்றது.

பல நூறு ஆண்டுகள் வலுவாக நீடித்திருந்த தேவதாசி முறை தேவதாசி ஒழிப்புச் சட்டம் மூலம் ஏனைய கோவில்களில் ஒழிக்கப்பட்டாலும் பூரியில் மட்டும் இன்று வரை உயிருடன் உள்ளது ஏன்?

''ஏனென்றால் தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும் தேவதாசி முறை விபச்சாரமாகப் பரிணமித்தது போல் பூரியில் நடக்கவில்லை.



முன்னாள் தேவதாசி பரஸ்மணி

இங்கு மட்டும் தான் உண்மையாக உள்ளது'' என்று சில அறிஞர்கள் கூறுகின்றனர்.

எது உண்மை? இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இறந்து போன கடைசி தேவதாசி கோகில பிரபா உண்மையில் தனது உறவுப் பெண்கள் இருவரை தத்தெடுத்து தேவதாசியாவதற்குரிய அனைத்துப் பயிற்சிகளையும் அளித்துள்ளார். இருப்பினும் அந்தப் பெண்கள் இருவரும் தேவதாசியாவது அவமானகரமானது என்பதை உணர்ந்து இறுதியில் மறுத்து விட்டனர்.

மேலும் 1954-55-இல் பூரி கோவில் நிர்வாகத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் போது 30-க்கும் மேற்பட்ட தேவதாசிகள் கடவுளுக்கு 'சேவை' செய்து வந்தனர். அவர்கள் அனைவரும் சமூக வாழ்க்கைக்குத் திரும்பி விட்டனர்.

தேவதாசிகளது ஆரம்பமும் முடிவும் வறுமையோடு பிணைந்திருக்கிறது என்பது ஆச்சரியமில்லா உண்மை. ஒடிஸி நடனத்தைப் பயிலுவதற்காக பூரிக்கு வந்த பிரடரிக் ஏ. மார்க்லின் என்ற பெண் (மனிதவியல் ஆய்வாளர்) அறிஞர், ''கடவுளரின் மனைவியர்'' என்ற தமது புத்தகத்தில் தேவதாசிகளது வாழ்க்கையை விரிவாக ஆராய்ந்திருக்கிறார். பெற்றோர் தமது பெண்களை தேவதாசிகளாக அனுப்புவதற்குக் காரணம் அவர்களை வளர்த்து ஆளாக்கி திருமணம் செய்து வைக்க இயலாத வறுமையே என்கிறார் மார்க்லின்.

''தேவதாசி சேவைக்காக பெண்களை நாங்கள் அழைத்ததாகக் கூறப்படுவது தவறு. இந்தப் பெண்கள் தாங்களாகவே சேவை செய்ய முன் வந்ததினால்தான் அதைப்பற்றி விவாதிக்க அவர்களை அழைத்தோம். தேவதாசி முறை தலைமுறை தலைமுறையாக பூரி கோவிலில் இருந்து வரும் முறைதான்'' என்கிறார் பூரியின் மாவட்ட ஆட்சித் தலைவரும், கோவில் நிர்வாக கமிட்டியின் உதவித் தலைவருமான கே.கே. பட்நாயக்.

'இந்துதர்மம்' காக்க பெண்களை 'சமர்ப்பணம் செய்வது அல்லது பலியிடுவது என்பது புதிதல்ல. 1987-ல் இராஜஸ்தான் மாநிலத்தில் ரூப்கன்வர் என்ற பெண்ணை உடன் கட்டை ஏற்றிக் கொன்ற இந்துத்துவ வெறியர்களின் செயலைக் கண்டு நாடே அதிர்ந்தபோது, 'சதி'யைப் நியாயப்படுத்தினார் பாரதீய ஜனதாள அகில இந்திய துணைத் தலைவர் விஜயராஜ சிந்தியா.

பூரியின் ராஜகுடும்ப புரோகிதர் ரமேஷ் சந்ர ராஜகுரு, ''நேர்காணலுக்கு வந்த பெண்களிடம் முன்பு ஆடச் சொன்னதாகக் கூறப்படுவது சிலரின் வளமான கற்பனை. 50 ஆண்டுகளுக்கு முன்பே நடனத்தை நிறுத்தி விட்டோம். எவ்வித காரணமும் இல்லாமல் தேவதாசி முறை என்றாலே உடனே விபச்சாரத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பது எந்த விதத்தில் நியாயம்?'' என்று குமுறுகிறார். ராஜகுருவின் கோபத்தை பரிசீலிப்

படிப்பகம்

www.padippakam.com

பதற்கு நாம் மன்னர்கள் காலத்தில் இருந்து தான் தொடங்க வேண்டும்.

அதற்கு முன்பாக, முன்னாள் தேவதாசியான பரஸ்மணியிடம் ஒரு கேள்வி - ஆண்டவன் முன் நடனம் ஆடுவது பற்றி என்ன கூறுகின்றீர்கள்? ''நான் ஜகன்னாதருக்கு மணமுடிக்கப்பட்டவள். தன் கணவனுடன் இரவு என்ன செய்தாள் என்பதை மணமான பெண் ஒருத்தி உலகத்திற்கு எப்படிக் கூற முடியும்?'' என்று புன்சிரிப்புடன் மறுக்கிறார். இப்படி நடனம் ஆடுவது தொடருவது மட்டுமல்ல, ஒரு தேவதாசியின் வாழ்க்கை என்பது திறந்த புத்தகமல்ல.

தேவதாசிகளாவதற்கு தேர்ந்தெடுக்கப்படும் பெண் வேறெந்த ஆடவருடனும் உறவு வைத்திராத தூய்மை வாய்ந்தவளாக இருத்தல் வேண்டும். பின்னர் அவளுக்கு ஆடல், பாடல், அலங்காரம் உட்பட பல்வேறு கலைகளில் வளர்ப்புத் தாயாரால் (தேவதாசி) பயிற்சி அளிக்கப்படுகிறது. தக்க காலம் வந்த பிறகு அவள் ஜெகன்னாதருக்கு மணமுடிக்கப்படுகிறாள். மணப்பெண்ணாக அலங்கரிக்கப்பட்டு 'பொட்டுக் கட்டுதல்' என்றழைக்கப்படும் இந்நிகழ்ச்சி தேவதாசியின் வாழ்க்கையில் முக்கிய நிகழ்வு. அவள் இறக்கும் போதும் மணப்பெண்ணாக அலங்கரிக்கப்பட்டே எரியூட்டப்படுகிறாள். இப்படி ஏனைய இந்துப் பெண்களுக்குள்ள 'விதவை அபாயம்' தேவதாசிகளுக்கு இல்லையென்றாலும், ஏனைய இந்துப் பெண்களின் மண வாழ்க்கை தேவதாசிகளுக்குக் கிடையாது.

சனாதனிகளின் பார்வையில் மன்னன் என்பவன் யார்? விஷ்ணுவின் அவதாரம். உயிருள்ள ஜெகன்னாதர்களான மன்னர்களுக்கு செய்யும் அந்தப்புரச் சேவை தேவதாசிகளின் கடமையாகும். ராசராச சோழன் காலத்து தேவதாசிகள் 'அரசனின் திருமேனிப் பணியாளராக' அந்தப்புரத்தில் சேவை' செய்து வந்தனர் என்பது இங்கு நினைவு கூறத் தக்கது.

தேவதாசிகளுக்கு பொட்டுக் கட்டும் சடங்கு முதல் அவளது கோவில் வாழ்க்கையைத் தீர்மானிக்



பூரியின் முன்னாள் ராஜா திவ்ய சிங் தேவ்



ஒடிஸி நடனக் கலைஞர் சன்ஜுக்தா பாணிக்கிரஹி

கின்ற பண்டா என்றழைக்கப்படும் பார்ப்பன புரோகிதனுக்கு செய்யும் சேவை ஜெகன்னாதருக்குச் செய்யும் சேவையைப் போலவே முக்கியத்துவம் உடையது. இதையெல்லாம் சகித்துக் கொள்ளும் தேவதாசி, இவர்களுக்கு அப்பாற்பட்டு வெளி ஆடவருடன் தொடர்பு கொண்டால், மன்னனும், பண்டாவும் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

மன்னர்கள், பார்ப்பனர்கள், பின்னாளில் ஜமீன்தார்கள் என்று உயர்ரக மேட்டுக் குடியினரோடு உறவு கொண்டாக வேண்டிய தேவதாசி அவர்களுடன் பகிரங்கமாக வாழ முடியாது.

தேவதாசியின் வாழ்க்கை பட்டு சரிகையைப் போல மின்னினாலும் அதன் பின்னே உள்ள அவலமும், துயரமும், அழுகுரலும் - ஜெகன்னாதர் கோவிலில் நெடிதுயர்ந்து நிற்கும் கருங்கற்களுக்கு மட்டும் தான் தெரியும்.

''அரசாங்கம், சாராயம், கள் இவைகளை எப்படி வருவாயாகக் கருதி நடத்த 'வேண்டுமோ அது போலவே பெரும் கோவில்களையும் உண்டாக்கி அரசு வருவாய்க்கு வழி தேட வேண்டும்'' , என்று சாணக்கியர் அர்த்தசாஸ்திரத்தில் வலியுறுத்துகின்றார். பெருமளவு மக்களின் வாழ்க்கையும், அரசின் பொருளாதாரத்தையும் தீர்மானிக்கின்ற நிறுவனங்களாகவே கோவில்கள் இருந்தன. இன்றைய ஐந்துநட்சத்திர விடுதிகளின் சகல வசதிகளும் அன்றைய கோவில்களில் இருந்தன. இதில் ஆடல், பாடல் மூலம் மன்னனை மகிழ்விக்க பார்ப்பனர்களால் நியமிக்கப்பட்டவர்களே தேவதாசிகள்.

பண்டைய கதைகளை இங்கு கிசுகிசுக்க வேண்டாம், தேவதாசி சேவைக்கு நாங்கள் விண்ணப்பித்திருக்கும் காரணங்களை சற்றுக் கவனியுங்கள் எனும் கஜால் ஜெனா என்ன கூறுகின்றார்? ''ஐந்து வயதிலேயே கண்ணன் என்னுள் வியாபித்திருப்பதை உணர்ந்தேன். 19 வயதில் தீட்சை பெற்றுக் கொண்டேன். நின்று போன தேவதாசி சேவையை உயிர்ப்பிப்பது கடமை என்று கருதி என் சிஷ்யைகளுடன் விவாதித்தேன். ஏதோ ஒரு வகையில் ஜெகன்னாதருக்கு சேவை செய்ய விரும்பும் எங்கள் பக்தி தனிப்பட்ட விசயம். இவ்வளவு இருந்தும் கடவுளின் முன்பு அநீதியான செய்கைகளைச் செய்வது போல எங்களை ஏன் கோரமாக மதிப்பிடுகிறீர்கள்?''

இல்லை புனிதமாகவே மதிப்பிட முயலுவோம். காலையில் திருப்பள்ளி எழுச்சி, இரவிலே பள்ளியறைப்பாட்டு, மாலையில் கால் வலிக்க நடனம் எதுவானாலும், திரைச்சீலையிட்ட ஜெகன்னாதரின் கருவறைக்கு வெளியே, வெளிச் சுற்றுப் பிரகாரத்தில் தான் நடத்த முடியும். தேவதாசி 'அபவித்ரா' (தூய்மை இல்லாதவள்)வாகக் கருதப்படுவதால், பூஜைகள் செய்யும் போது 'பண்டா' (பார்ப்பனப் புரோகிதன்) அவள் கையால் குடிநீர் கூடக் குடிக்க மாட்டான், தன்னைத் தொடவும் அனுமதிக்க மாட்டான். உள்ளம் உருக, பக்தி பெருக கீத கோவிந்தம் பாடும் தேவதாசிகளுடைய புனிதத்தின் கதி இதுதான்.

முன்னாள் ராஜாக்கள், ராணிகள், பாரதீய ஜனதாவில் உலாவரும் இந்நாளில் ஜெகன்னாதபூரியின் ராஜா திவ்ய சிங்தேவ் இந்து முன்னணிக் குரலில் ஒரு கேள்வி கேட்கிறார். ''கடவுளின் சேவைக்காக வாழ்க்கை

கணவனை இழந்த பார்ப்பனப் பெண்களுக்கு வெள்ளையாடை, மொட்டை - விதவைக் கோலம். சத்திரியக் குலப்பெண்களுக்கு சதி-உடன்கட்டை. சூத்திர, பஞ்சம பெண்களோ உயர்சாதி சமூகத்திற்கு உரிமையான போகப்பொருள்.

பார்ப்பன, தந்தை வழி ஆணாதிக்க சமூகம் பெண்களுக்கு விதித்திருக்கும் 'வாழ்க்கை' இதுதான்.



படிப்பகம்

யைத் துறந்து, தங்களது சொந்த முடிவில் பொருளியல் உலகை மறந்து, பெண்கள் துறவிகளாகவும், சகோதரிகளாகவும் மாறுவது அனைத்து மதங்களிலும் உள்ளதுதான். தேவதாசி முறையும் அத்தகையதுதான்''.

உண்மையில தேவதாசி முறை அத்தயைதல்ல. தேவதாசிகளாவதற்கு நீங்கள் வைத்திருக்கும் தகுதி என்ன? ஆடல், பாடல், அழகுக் கலை, அலங்காரம் இவைதானே? பிறமதத்துப் பெண்கள் துறவறத்தின் மூலம் சமூகத்தின் பாதுகாப்பையும், மதிப்பையும் பெறும்போது, தேவதாசியாக மாறும் பெண்ணோ - பாதுகாப்பின்மையையும், அவமதிப்பையும் பெறுகிறாளே அது ஏன்?

ஆக மன்னர்கள், பார்ப்பனர்கள், அதிகாரிகள் என அனைவரும் தேவதாசிகளுக்காக பேச முற்படும்போது 'கலைஞர்கள்' மட்டும் சும்மா இருப்பார்களா?

இன்று தமிழ்நாட்டு பார்ப்பனப் பெண்களால் உலகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருக்கும் பாதக் கலை தேவதாசிகளால் தான் வளர்த்து உருவாக்கப்பட்டது என்பதில் உவகை அடைகிறார் இந்தியா டுடே வாஸந்தி. ஒடிசி நடனக் கலைஞர் சன்ஜுக்தா பாணிக்கிரஹியும் இக்கருத்தை ஆதரித்து, தேவதாசி முறையில் எவ்விதத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை என்றும், தானே பகுதி நேர தாசி சேவை செய்ய விரும்புவதாகவும் கூறுகிறார்.

அமெரிக்காவை பூலோக சொர்க்கமாக மாற்றியமைப்பதற்கு ஆப்ரிக்க கருப்பனைக் கடத்தி வந்த அடிமை முறை உதவி செய்திருக்கிறது என்பதாக நாகரீக உலகின் எந்த ஒரு மனிதனும் கொண்டாட மாட்டான். தேவதாசிகள் காற்சலங்கை கட்டிக் கொண்டு நடனம் ஆடும் போது பாதம் படுகின்ற இடங்களில் உறைந்திருக்கும் ரத்தம் நம்மை உலுக்குகிறது. அதே சமயம் பாதத்தின் பதத்தையும், ஆட்டத்தின் அபிநயத்தையும் மெய் சிலிர்த்து ரசிக்கிறார்கள் வாஸந்தியும், பாணிகிரஹியும்.

○ ○ ○

1930 களில் தேவதாசி முறையை எதிர்த்துக் கிளம்பிய இயக்கத்தை அறியும்போது வாழையடி வாழையாக சனாதனிகளின் குரல் இன்றைக்கிருப்பதுபோல் ஒலிப்பதைக் கேட்க முடியும்.

பெரியார் தலைமையிலான சுயமரியாதை இயக்கமும், காங்கிரசாரும் - இந்தியப் பெண்கள் சங்கத்தைச் சேர்ந்தவருமான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியும் தேவதாசி முறையை ஒழிக்க போராடிவந்தார்கள். 1930ல் - முத்துலட்சுமி ரெட்டி தேவதாசி ஒழிப்பு மசோதாவைக் கொண்டுவந்தபோது, இராஜாஜி இதில் அக்கறையில்லாமல் நடந்து கொண்டார் என்பதை முத்துலட்சுமி கூறுகிறார். காங்கிரசில் ராஜாஜிக்கு போட்டியான சத்திய மூர்த்தி அய்யர், ''இன்றைக்கு தேவதாசி முறையை ஒழிக்கச் சொல்வீர்களானால் நாளைக்கு பார்ப்பனர்களை அர்ச்சகராக்குவதையும் எதிர்க்கலாம். தேவதாசிகளை ஒழித்துவிட்டால் பகவானின் புண்ணிய காரியங்களை யார் செய்வார்'' என்று வாதிட்டார்.

> அன்று தேவதாசி முறையை நேரடியாக ஆதரிக்க சத்திய மூர்த்தி அய்யர். மறைமுகமாக ஆதரிக்க ராஜாஜி ஐயங்கார்.
>
> இன்று நேரடியாக ஆதரிப்பவர்கள் பூரி பார்ப்பனப் புரோகிதர்கள், முன்னாள் மன்னர். மறைமுகமாக ஆதரிக்க பூரி மாவட்டக் கலெக்டர், இந்தியா டுடே வாஸந்தி போன்றவர்கள். இழை அறுபடாத இந்துப் பாரம்பரியத்தின் தொடர்ச்சி இதுதான்.

''பகவானுடைய புண்ணியத்தை இதுவரை எங்கள் குலப் பெண்கள் பெற்றுவந்தனர். வேண்டுமானால் இனி அவரது (சத்திய மூர்த்தி அய்யர்) இனப்பெண்கள் அந்த புண்ணியத்தை ஏற்றுக்கொள்ளட்டுமே? அது என்ன எங்கள் குலத்திற்கே ஏகபோக காப்பிரைட்டா?'' என்று திருப்பிக் கேட்டார் முத்துலட்சுமி ரெட்டி.

இந்துத்துவ முகங்களில் மிதவாதத்தை காங்கிரசும், தீவிரவாதத்தை பாரதிய ஜனதாவும் இன்றைக்கு பிரதிநித்துவம் செய்வது போன்று அன்றைக்கு ராஜாஜியும், சத்தியமூர்த்தியும் விளங்கினார்கள்.

இச்சூழலில்தான் 1883-இல் தாசி குலத்தில் பிறந்து, இளவயதிலேயே பொட்டுக்கட்டப்பட்டவிட்ட இராமாமிர்தம் அம்மையார். தன் சொந்த அனுபவங்களைக் கொண்டு, தேவதாசி ஒழிப்பை வலியுறுத்தி ''தாசிகள் மோசவலை'' எனும் நாவலை மிகுந்த சிரமத்துக்கிடையில் 1936-இல் வெளியிட்டார்.

○ ○ ○

20-ம் நூற்றாண்டிலும் இந்துத்துவம் தனது வருணாசிரம நெறியை இருத்திக் கொள்ள மூர்க்கமாக முயலுகிறது. பாபர் மசூதி இடிப்பு, பிள்ளையார் பால் குடித்த புரளி, என ஒவ்வொன்றிலும் 'ஹிந்து எழுச்சி ஆரம்பித்து விட்டது' எனக் கும்மாளமிடும் இந்தக் கும்பல்தான் தேவதாசி முறையை நியாயப்படுத்தும் நபர்களின்-கருத்துக்களின் அடித்தளம்.

அந்த அடித்தளத்தை தகர்க்க 60 ஆண்டுகளுக்கு முன்பு 'தாசிகள் மோசவலை' என்ற தனது நாவல் மூலம் வழி காட்டுகிறார் இராமமிர்தம் அம்மையார். அவரது ஒவ்வொரு வார்த்தையும் நமக்கு சுரணையூட்டும். நாவலில் இருந்து,

''ஒரு குறிப்பிட்ட பெண் சமூகத்தை விபசாரத்துக்குத் தயார் செய்து வைத்திருப்பது இந்நாட்டு ஆண் சமூகத்தின் மிருக இச்சைக்கு தக்க சான்றாக இருக்கிறது. பகுத்தறிவும் நாகரீகமும் வளர்ந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் தேவதாசி முறையை ஒழிப்பது சாஸ்திர விரோதம், சட்ட விரோதம், கலை விரோதம் என்று கூக்குரல் கிளப்பும் சாஸ்திரிகளும், தலைவர்களும் இருப்பது மானக்கேடாகும். தேவதாசி முறைக்கு அடிப்படையாக இருக்கும் கடவுள், மதம், ஸ்மிருதி, ஆகமம், புராணம் ஆகியவைகளை முதலில் ஒழிக்க வேண்டும். இவைகளை ஒழித்து விட்டால் தேவதாசிக் கூட்டம் இருப்பதற்கே நியாயமிருக்காது''.

● இளநம்பி



படிப்பகம்

www.padippakam.com

ஒரு காலத்தில் நேரம் காலம் பாராது இப்படி வந்து போனவர்கள் தான். ஆனால் இன்று காலம் கெட்டுப் போய் கிடக்கின்றது.

பட்டப்பகலிலேயே ஒத்தை செத்தை வந்து விட்டால் ''காசை எடு'' உருளோசை கழட்டுங்கிற காலமாச்சே. போதாதற்கு இவர்கள் சங்கத்திற்கு ஆள் சேர்க்கின்றபடியால் துரை வேற ''நாட்டில்'' அடி ஆள் வைத்திருக்கின்றான்.

சங்கத்திற்கு சேர்ந்த பின்னர் துரைமார்களின் தட்டிக்கேட்க முடியாத அதிகாரத்திற்கு ஆபத்து வந்துவிட்டது. அரைப்பேர் போடாதே, குறைவாக அளக்காதே, லயத்தை திருத்து என்றெல்லாம் கோரிக்கைகள் வர இந்த பிரதேசத்தில் புகுந்த இந்த புது நோயையும் அதன் சூத்திரதாரிகளான கறுப்பையா தலைவர், நந்தபால உட்பட இன்னும் பல தோட்டங்களில் உள்ள சிலரையும் எப்படியும் மடக்கி விட வேண்டுமென துரைமார்கள் கங்கணம் கட்டி நின்கின்றனர்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் அந்த சம்பவம் நிகழ்ந்தது. கறுப்பையா தலைவரும் நந்தபாலவும் கொழும்பு போய், இது போல் இரவில் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருக்கும் வேளையில் ரேந்தகொட சந்தியில் வைத்து காடையர்களினால் தாக்கப்பட்டனர். நந்தபால சிங்களத்தில் கூச்சலிட்டபடியால் பக்கத்து கிராமவாசிகள் ஓடிவந்து இருவரையும் காப்பாற்றினர்.

எனினும் இருவரும் ஒரு வாரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வேண்டி இருந்தது. எனவேதான் இவ்வாறான வேளைகளில் தோட்டங்களுக்குத் திரும்பிச் செல்வதை தவிர்த்துக் கொண்டார்கள்.

புகையிரத நிலையத்திற்கு செல்லும் வழியில் கோயிலை கடக்கும் போது நந்தபால, தலைவரை கேட்டான், ''இந்த வருஷம் நம்ம தோட்டத்தில காமன்டி ஊன்றுறது இல்லையா?''

''காமன் மட்டுமில்ல சிந்தா கட்டி தேர்கல் எல்லாம் கும்பிடனும். அதோட உச்சி மலையில இருக்கிற கலேபண்டார கோயிலயும் பொங்க வைக்கனும். ஆனா இப்ப தோட்டத்திலே அநேகமானவுங்க சேர்ச்சிற்குதானே போறாங்க எப்படி வரி வசூலிக்கிறது...?'' தலைவரின் குரல் சோகமாக ஒலித்தது.

''ஆமா தலைவரே, நர்னும் சொல்லனும்னுதான் இருந்தேன். நம்ம தோட்டத்தில் உள்ள மொத்தம் எழுபது குடும்பத்திலே அஞ்சி குடும்பம் நாங்க சிங்களவங்க. நாங்க ரிதிகம பன்சலைக்கு போர தோட, பத்தினி தெய்யோ கோவிலுக்கும் வந்து சாமி கும்பிடுறோம். நம்ம தோட்டத்தில உள்ளவங்க சடங்கு, கல்யாணம்னு டவுன்ல உள்ள கோயில்களுக்கு போனா நம்ம ஆளுகளுடைய நெலமை தெரியாம அங்க உள்ள ஐயர்மாருக சின்ன விசயத்திற்கெல்லாம் ஐநூறு, ஆயிரம்னு புடிங்கி திங்கிறாங்களாம். குளியாபிட்டி பக்கம் ஒரு ஐயர் கழிப்பு கழிக்கனும் நூல் கட்டனுன்னு ஊர் உலகத்தில இல்லாத சாமான் சட்டெல்லாம் கேட்கிற தோட, ஏழைகளுக்கு ஒரு மாதிரியும் பணக்காரங்களுக்கு ஒரு மாதிரியும் நடத்துராராம். இதுனாலதாம் நம்ம சனங்க இப்ப ஆதரிப்பார் இல்லாம கோயிலுக்கு போகவே பயப்படுறாங்க. ஆனா பாதிரிமார்களும் சிஸ்டர்மார்களும் இப்ப தோட்டம் தோட்டமா வந்து உடுப்பு துணி வகைகள் எல்லாம் கொடுக்கிற தோட, காசு பணம் வாங்காம ஜெபம் சொல்லிக் கொடுத்து ஆதரிக்கிறாங்க. இப்ப அவுங்க நம்ம தோட்டத்தில கூறின புத்திமதிகளாலதான் நம்ம தோட்டத்து ஆம்புள பொம்புள எங்க ஸ்பிரிட் காயவைச்சி குடிக்கிற பழக்கத்தை விட்டிருக்காங்க....''

''குட்டி குட்டி தோட்டங்களாக சிறைப்பட்டுக் கிடக்கும் றப்பர் தென்னந்தோட்டங்களில் வாழும் நம்மவரின் நிலை கயிறறுந்த பட்டம் போல் தோடர்பற்றதுதான்.''

''ஆமா நந்தா இப்ப அநேகமான கோயில்களை நம்ம ஏழைகள் மதிக்காமல் நடக்கிறபடியால்தான் இதெல்லாம் நடக்குது. நான் முந்தி சொன்னது ஒனக்கு ஞாபகம் இருக்குமுன்னு நெனைக்கிறேன். முந்தி நாங்க வன்செயல்ல அடிபட்டு காட்டுல ஒளிஞ்சி இருந்து பிறகு அகதி முகாம்ல இருந்தோம் இல்ல, அங்கேயும் எங்கள தோட்டத்து ஆளுன்னு பிரிச்சு வைச்சுத்தான் நடத்துனாங்க. பாண் வாங்கிற போலிம்ம கூட வேற வேறயாகத்தான் வைச்சாங்க...''

''அநியாயக்காரனுக... மழை வருற மாதிரி இருக்கு. வாங்க வேகமா நடப்போம்'' என்றவாறு ''ஆமா தலைவர நம்ம இருக்கிற லயன் காம்பிரா நமக்கே சொந்தமாகப் போகுதுன்னு ஒரு பேச்சி அடிபடுதே...''

தலைவர் கறுப்பையா எட்டி நடையைப் போட்டவாறு கூறினார், ''நந்தா உனக்கு நாட்டுல வயல், வீடு இதெல்லாம் இல்ல.''

''உன்ன போல குடும்பங்கள் எங்க மாதிரி தோட்டத்தில இருக்கிங்க. நான் இந்த தோட்டத்து லயத்திலதான் பிறந்தேன். எங்கப்பாவும் இதே தோட்டத்தில இந்த லயத்தில் பிறந்திக்காம். நாங்க பரம்பரையா இந்த தோட்டத்திலதான் வாழ்ந்தோம். இந்த லயத்தை விட்டு எங்கள போகச் சொன்னா நாங்க எங்க போவோம். இப்ப அஞ்சி வருஷம் பத்து வருஷம் ஒரு வீட்டுல கூலிக்கு வாடகைக்கு இருப்பவங்களைக் கூட வெளியே அனுப்ப முடியாம இருக்கு. அப்படி இருக்க நேரம் பரம்பரையா இருக்க நமக்குத்தான் இந்த லயம் காம்பிரா எல்லாம் சொந்தம்.''

இப்பொழுது மழை கொட்டத் தொடங்கிவிட்டது. இருவரும் ஓடி ரயில்வே நிலையத்திற்கு முன்பிருக்கும் விறாந்தையை அடைந்தனர்.

ரயில் நிலையத்தில் பலர் இரவு வண்டிகளுக்காகக் காத்து நின்றனர். தம் கைவசம் இருந்த அன்றைய செய்தித்தாளை இருவரும் தரையில் விரித்துப் படுத்த சிறிது நேரத்திற்குள் இருவரும் மெய்மறந்து தூங்கிவிட்டனர்.

தூறிக் கொண்டு வந்த மழை பெரும் பாட்டமாக பெய்து கொண்டிருந்தது. எவ்வளவு நேரம் தூங்கினோம் என்று தெரியாத இருவரும் பெரும் மழையோடு பயங்கரமாக இடித்து முழங்கும் ஓசை கேட்டு திடுக்கிட்டு எழுந்தனர்.

மூன்றாம் சாமம் கழிந்து பொழுது புலரும் வேளை அடைமழை விடாது பெய்து கொண்டிருந்தது. வரவர அதன் வேகம் அதிகரித்து ஓங்காரத்துடன் பெய்யத் தொடங்கியது. எங்கும் வெள்ளக்காடு. ஒருவாறு இருவரும் மறுநாள் வீடு வந்து சேரும்போது நண்பகல் தாண்டிவிட்டிருந்தது.

மழை... மழை... பெருமழை... மழை விட்டபாடாக இல்லை. தோட்டத்து கான் குட்டைகள் கூட நிரம்பி வழிந்து பெருக்கெடுத்து ஓடு



படிப்பகம்

www.padippakam.com

கின்றன. வானம் லயத்துக் கூரையைப் பொத்துக் கொண்டு ஒழுகுகின்றது. மேட்டு லயத்தில் இருந்து ஓடி வந்த ஒருவன் ''தலைவரே எங்க லயத்துமேல் ஈரப்பலா மரம் விழுந்திருச்சே ஐயையோன்னு'' ஒப்பாரி வைத்தான்.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் எல்லோரும் அங்கு ஓடினர். நல்லவேளை லயத்திற்குப் பெரிதாகச் சேதம் ஒன்றும் இல்லை. ஈரப்பலா மரத்தின் சிறிய வாது ஒன்று மட்டுமே வயத்தைத் தாக்கி இருந்தது.

மழை... மழை... பெருமழை... போதாதற்கு ஊளையிட்டுச் சீறும் காற்றும் சேர்ந்து சுழன்று மரங்கள் பேயாட்டமாடிப் பய்முறுத்தின.

பண்பட்ட இதயம் போல் மூன்று தலைமுறையின் சோகங்களைத் தாங்கிக் கொண்டு மழை, வெயில், காற்று ஆகிய இயற்கையின் சீற்றங்களைச் சகித்துக் கொண்டும் கல்வீச்சு, சூறையாடல், எரியூட்டல் ஆகிய இன வெறிச் செயல்களினால் புண்பட்டும் நிலைகுலைந்து போன தோட்டத்து லயங்களின் தகரங்கள் தம் ஆற்றாமையைச் சொல்லி அழ சுவர்கள் கரைந்து காரை பெயர்ந்து இடிந்து விழத்துடிக்கின்றன.

தொடர்ந்து பெய்யும் மழையினால் தரை ஊற்று கிளம்பி பொங்குகின்றது. துரையைத் தேடி ஓடினார் தலைவர். அவர் கொழும்பில் நடைபெறும் றகர் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள போய்விட்டிருந்தார்.

அவருக்கும் கீழே இருப்பவர்கள் ஒரு முடிவும் எடுக்க முடியாத நிலை தலைவர் ஏமாற்றுதலுடன் திரும்பி வந்தார்.

இனியும் பார்த்துக் கொண்டிருந்தால் நிலைமை மேலும் மோசமடையலாம். எல்லோருமே கறுப்பையா தலைவரை நச்சரித்துக் கொண்டிருந்தனர்.

கூரைகள் பெருமளவில் ஒழுக தரை ஊற்று கண்டு போய்விட்டது. எவ்வளவு தண்ணீரைத்தான் அள்ளி அள்ளி வெளியே ஊற்றுவது. அள்ளிய கைகள் அசந்து போய்விட்டன.

லயத்தை ரிப்பேர் செய் என்ற கோரிக்கையை அன்றே கவனித்திருந்தால் இன்று நிலைமை வேறு. அதைப்பற்றி இப்போது பேசிப் பலனில்லை. காற்றில் பறக்கத் துடிக்கும் தகரங்களையும் இடிந்து சாய்ந்து விட நழுவும் சுவர்களையும் தாங்கிப் பிடிக்க வேண்டும்.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது சிறுவர்கள் உட்பட அனைவரும் புறப்பட்டனர். தோட்டத்தை அடுத்து காட்டுத் தொங்கலில் இருக்கும் மானாப்புல் மலையிருந்தும் சிந்தா கட்டில் இருந்தும் கட்டு கட்டாக இலுக்கு மானாவும் கம்புதடிகளும் வந்து சேர்ந்தன.

இற்றுப் போய் உடைந்த ''பரால'' ரீப்பைகளுக்காக காட்டுத்தடிகளும் உக்கிப் போய் ஒழுகும் கூரைத் தகரங்களுக்கு மேலாக இலுக்கு மானாப்புல் கட்டு கட்டாகக் கட்டிப் போடப்பட்டு நிரவி விடப்பட்டன.

கூரையை ஊடறுத்து நிலத்தில் கொட்டிய நீர் குறைய தரை காய்ந்தது. சுவர்களும் நிமிர்ந்து கொண்டன. அன்றிரவு அனைவரும் அமைதியாக தூங்கினர். மறுநாள் மழை குறைய சூரியன் எட்டிப் பார்த்தான்.

மரம் காஞ்சிட்டா இன்னைக்கு இல்லாட்டியும் நாளைக்காவது பால் வெட்டலாம் என்று பேசிக் கொண்டனர். அப்போது மேட்டு லயத்துப் பக்கமாக துரையும் பெரிய கன்டக்டரும் வருவதாக ஒருவர் ஓடி வந்து தகவல் கூறினார்.

> 'நாங்க பரம்பரையா இந்த தோட்டத்தில தான் வாழ்ந்தோம். இந்த லயத்தை விட்டு எங்கள போகச் சொன்னா நாங்க எங்க போவோம்.''

தலைவர் கறுப்பையாவும் நந்தபாலாவும் ஒட்டமாக அங்கு ஓடிச் சென்றனர். துரை மழையினால் ஏற்பட்ட சேதங்களையும் லயங்களையும் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். துரைக்கு சலாம் தெரிவித்த கறுப்பையா தலைவர் ''பார்த்தீங்களா, துரைகளே நான் எத்தனை தடவை லயத்தை ரிப்பேர் செய்ங்க செய்ங்கன்னு ரிப்போட் செஞ்சேன். இப்ப பார்த்தீங்களா, எங்களுக்கு நடந்த கதியை. நாங்க மட்டும் இந்த தடவை காட்டுக் கம்பு தடிகளை வெட்டிப் போட்டு இலுக்கு மானாவை வச்சி கட்டாட்டி லயமே மழையிலே ஊறிப்போய் இடிஞ்சி விழுந்திருக்கும்ங்க. அதுனால துரை இனியும் சுனங்காமல் லயத்தை ரிப்பேர் செய்து கட்டித்தாங்க'' பவ்யமாகக் கேட்டார் கறுப்பையா தலைவர். தான் எடுத்த சமயோசித நடவடிக்கையை துரை பாராட்டுவார் என்ற நம்பிக்கையில் வார்த்தைகள் பெருமிதப்பட்டுத் தெறித்தன.

''அது இல்ல தலைவரே, இப்ப நீங்க பெரிய குத்தம் செஞ்சிட்டீங்க. இந்த லயம் தோட்டத்து சொத்து. தோட்டம் அரசாங்கத்தினதும் கம்பெனியினதும் சொத்து. இதுல உள்ள ரீப்ப பராலகளை உடைச்சி மாத்தி காட்டுக் கம்புகளை போட்டுக் கட்ட உங்களுக்கு அதிகாரம் கிடையாது. தகரத்திற்கு மேலே இலுக்கு மானாப் புல்லு வைத்து யாரைக் கேட்டுக் கட்டினீங்க. இதுக்கெல்லாம் நம்ம மேல் இடத்தில் அனுமதி பெறனும். உங்க உங்க விருப்பத்திற்கு இதெல்லாம் நடக்க முடியாது. அதனால நான் பொலீசில் என்றி போட்டிட்டு ரீஜனல் ஆப்பீசுக்கும் அறிவித்து உங்களுக்கு நடவடிக்கை எடுத்து தண்டம் போடப் போறேன். இதை இப்போது நான் அறிவிச்சி நடவடிக்கை எடுக்காட்டி பின்னுக்கு எனக்கும் குத்தம் கிடைக்கும்.''

''துரை இதென்னங்க அநியாயம்'' கறுப்பையா தலைவர் கண் கலங்கி குரல் கொடுத்தார்.

கறுப்பையா தலைவரின் பேச்சைக் கேட்க அங்கு துரை இல்லை. அவர் தூரத்தில் நிறுத்தியிருக்கும் ஜீப் வண்டியை நோக்கி நடந்து கொண்டிருக்கின்றார்.

இதுவரை ஊமையாகக் காய்ந்த வெயில் சற்றே தணிய வானத்தில் மீண்டும் கரு மேகங்கள் திரண்டுவர வானம் இருண்டு கொண்டு வருகின்றது. வானம் ஒரே கூரைதான். மெல்லிய தூறல்கள் பனித்துளியென துமிக்கிறது. மழை மழை.

மீண்டும் பெரும் மழை ஒரு பாட்டம் பெய்து அழுதுதான் தீர்க்கும் போலிருக்கிறது.

●

(நன்றி: மலையகப் பரிசுக் கதைகள்
கலை ஒளி முத்தையாபிள்ளை நினைவுச் சிறுகதைப் போட்டி.
நூல் கிடைக்குமிடம்:
சீமைக்காற்று, சென்னை
விலை: ரூ. 15/-)



படிப்பகம்

www.padippakam.com

# வல்லரசுகளின் கையில் புதிய ஆயுதம்:

# தகவல் உலகம்

''கடந்த பத்தாண்டுகளாக உலகம் முழுவதும், குறிப்பாக மேலை நாடுகளில் நடந்து வரும் அறிவியல் - தொழில் நுட்பப் புரட்சியின் மாபெரும் சாதனைகளில் ஒன்றுதான் ''தகவலுலகம்''.

தபால்-தந்தி, தொலைபேசி, தொலை அஞ்சல், தொலை அச்சு மற்றும் விண்வெளி - செயற்கைக் கோள்கள் மூலம் பரிமாற்றம் மற்றும் அஞ்சல் போன்ற அனைத்துவிதமான செய்தித் தொடர்பு சாதனங்களின் மிக உயர்ந்த பரிணாம வளர்ச்சி ஒரு புறம். வானொலி, சினிமா, வானொளி, பத்திரிகைகள், கம்பி வழி வானொளி சேவை போன்ற அனைத்துவகை மக்கள் பெருந்திரள் ஊடகச் சாதனங்களின் மிக உயர்ந்த பரிணாம வளர்ச்சி மறுபுறம், இவை இரண்டும் இணைந்த பல்வினைக் கணிப்பொறி நுட்பத்தால் உருவாகியிருப்பதுதான் ''தகவலுலகம்''.

தகவலுலகத்தில் வாழும் பயனீட்டாளர்கள் - குடிமக்கள் பத்திரிகையுலகின் வாசகர்கள், வானொலி உலகின் நேயர்கள், சினிமா - வானொளி உலகின் ரசிகர்களைப் போல செய்தித்தாளையும், திரையையும் வெறித்துக் கொண்டு வெறும் செயலற்ற பார்வையாளர்களாய் இருக்க மாட்டார்கள். இப்போதுள்ள இந்த மக்கள் பெருந்திரள் ஊடகச்சாதனங்களைப் போல தகவலுலகம் என்பது ஒரு வழிப்பாதை யல்ல. அதாவது மேலிருந்து கீழேயும், மையத்திலிருந்து விளிம்புக்கும் தரப்படும் செய்திகள், நிகழ்ச்சிகளைப் படித்து, கேட்டு, பார்த்துக் கொண்டிருப்பது மட்டுமே அவரது செயலாக இருக்காது. தொலைபேசிகளில் உரையாடுவதைப்போல இருவழிப்பாதையாக மட்டுமல்ல, உண்மையில் தொலைபேசி இணைப்பைத்தான் இதற்கும் பயன்படுத்துகிறார்கள் - குறுக்கும் நெடுக்குமாக ஒன்றை ஒன்று கடந்து, தாண்டிச் செல்லும் பலவழிப்பாதையாக அமைந்திருக்கிறது ''தகவலுலகம்'' ஆகவே, இந்தப் புதிய ஊடகத்தின் மூலம் அவரவர் தனக்குத் தரப்படும் செய்திகள், நிகழ்ச்சிகளுக்கு மேலாகப் போய்த் தனக்குத் தேவையான வற்றைத் தெரிவு செய்து கொள்ளவும் முடியும். தன்னிடம் இருப்பவற்றையும் அனுப்பவும் முடியும்.

உதாரணமாக, ஒரு திரையரங்குக்கான நுழைவுச் சீட்டுப் பெற்றுக் கொண்டு நுழைந்தால் ஒரு திரைப்படம் காட்டப்படுகிறது; அது பிடிக்கவில்லை, தேவையில்லை என்றால் உடனே மாற்றிக் கொள்ள முடியாது. வேண்டியதைத் தெரிவு செய்து கொள்ளவும் முடியாது; வீட்டில் வானொளியும் கம்பிவழித் தொடர்போ, ''டிஷ் ஆண்டனா'' எனப்படும் தொலைவாங்கியோ இருந்தால் கூட வானொளி நிலையத்தாரால் அனுப்பப்படும் சில பத்து நிகழ்ச்சிகளை மட்டுமே பெற முடியும்.

ஆனால் ''தகவலுலகவாசிகள்'' அந்த உலகில் புகுத்தப்பட்டு ஏற்கனவே உள்ள தயார்நிலை நிகழ்ச்சிகளில் இருந்து எதை வேண்டுமானாலும் தெரிவு செய்து கொள்ள முடியும். நம் கையிலிருக்கும் ''வீடியோ கேசட்டுகள்'' எனப்படும் ஒலி-ஒளிப் பேழைகளை ஓடவிட்டுத் தேவையான கட்சிகளைப் பார்க்கவும் - கேட்கவும் செய்வதைப் போன்றதும் அல்ல இந்தத் தெரிவு. பரந்து விரிந்த அளவு உலகம் முழுவதும் உள்ள தகவலுலகத்தில் இணைக்கப்பட்டுள்ள கணிப்பொறிகள் நினைவகங்களில் இருக்கும் செய்திகள், நிகழ்ச்சிகளில் இருந்து எதை வேண்டுமானாலும் தெரிவு செய்து பயன் பெற முடியும்.

■■■■■■■■■■■■■■■■■■

**உலகம் முழுவதும் உள்ள தகவல் உலகத்தில் இணைக்கப்பட்டுள்ள கணிப்பொறிகளின் நினைவகங்களில் இருக்கும் செய்திகள், நிகழ்ச்சிகளில் இருந்து எதை வேண்டுமானாலும் தெரிவு செய்து பயன்பெற முடியும்.**

■■■■■■■■■■■■■■■■■■

அது மட்டுமல்ல, தகவலுலக வாசிகள் - ''பயனீட்டாளர்கள்'' தாமே செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் அமைத்து மற்றவர்களுக்கு அனுப்பவும் முடியும். தகவலுலக நினைவகங்கள் என்பன உலகம் முழுவதிலும் உள்ள எல்லாக் கணிப்பொறிகளிலும், அல்லது தனிச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மிக மிகப் பிரம்மாண்டமான நினைவாதல் அடங்கிய சேமிப்புக் கிடங்கைக் குறிக்கும். . தகவலுலகவாசிகள் அனைவரும் தாம் தனித்தனியே வைத்திருக்கும் கணிப்பொறிகளின் நினைவகத்தின் கொள்ளளவை விடப் பலப்பல மடங்கு மிக மிக அதிகமான செய்திகளையும், நிகழ்ச்சிகள், தொகுப்புகளை தகவலுலக நினைவகத்தில் இருந்து வேண்டும் போது தருவித்துப்பயன்படுத்த முடியும்.

தான் காண்பவற்றையும் கேட்பவற்றையும் தனது விருப்பம் போல மாற்றி அமைத்துக் கொள்ள முடியும். அதாவது ஒருவன் நிற்பது போல உள்ள நிகழ்ச்சியை ஓடுவது போலவும், ஓடுபவனை நிற்பது போலவும், மனித முகத்தை நீட்டவும், அல்லது அதிகப்படுத்தவும், அல்லது மிருகமுகமாக்கியும், மிருக முகத்தை மனித முகமாக்கியும் இவ்வாறு பல மாற்றங்களை செய்து காணவும், இதே போல ஒலியை மாற்றிக் கேட்கவும் ஒலி-ஒளிக் காட்



படிப்பகம்

www.padippakam.com

சித் தொகுப்புகளை முன்னுக்குப் பின் மாற்றித் தொகுத்தும் பயன்படுத்த முடியும்.

அதாவது இதுவரை திரைப்படங்கள், வானொலி- வானொளிக்காக இயக்குநர்கள், படப்பிடிப்பாளர்கள், படத் தொகுப்பாளர்கள், இசையமைப்பாளர்கள் மற்றும் பிற தொழில் நுட்பக் கலைஞர்கள் தயாரித்தளித்த ஒலி-ஒளிக் காட்சி அமைப்புகளைப் பார்வையாளர்கள் தாமும் செயலாக்கத்துடன் பங்கேற்கும் ஒரு புதிய மக்கள் பெருந்திரள் ஊடக சாதனமாகத் ''தகவலுலகம்'' பிறந்திருக்கிறது.

ஆரம்பத்தில் அறிவியல் - தொழில் நுட்பக் கணக்குகளை மட்டுமே செய்வதாக இருந்த கணிப்பொறிகளின் இயக்கம் இப்போது பல்வினைச் செயல் ஊடகமாக மாறி விட்டது. அறிவியல் தொழில் நுட்ப ரீதியில் மட்டுமல்ல, மருத்துவம் முதல் அச்சுக்கலை வரை பல்வேறு பணிகளைச் செய்வதாகவும், வரைபடங்கள் போட்டு அவற்றின் வடிவமைப்புகளை மாற்றியமைக்கவும், கருத்துப்படங்களுக்கு உரமளித்து இயக்குவதாகவும், வானொளி பெட்டிக்குரிய ஒலி-ஒளி இணைப்புகளுடன், ஒலி-ஒளி காட்சி அமைப்புகளை வெட்டி- ஒட்டி படத்தொகுப்பு செய்வதாகவும் வளர்ந்தது. ''சினிமா'' வந்து நாடகம் - நாட்டியம் - இசைபோன்ற கலை - இசை வடிவங்களையெல்லாம் படச்சுருள்களில் ஒலி-ஒளியுடன் பதிப்பித்து பல பிரதிகள் எடுத்து உலகம் முழுவதுமுள்ள ''ரசிகர்கள்'' திரையரங்குகளில் அமர்ந்து கண்டு களிக்கும் மிகப் பெரிய மக்கள் பெருந்திரள் ஊடகமாகியது, கலாச்சாரத்தில் பெரும் புரட்சியாக அமைந்தது. அப்புறம் வானொலிப் பெட்டி, தொலைக்காட்சிக் கண்டு பிடிப்பு, அதிலும் ஒலி-ஒளிப் பேழைகளும் அதற்கான இயங்கும் சாதனமும் ஒவ்வொரு வீட்டையும், அறையையும் திரையாங்காக மாற்றியது மக்கள் பெருந்திரள் ஊடக அமைப்பில் இன்னும் ஒரு புரட்சியாகியது. இப்போது வானொளி- தொலைக்காட்சியின் இயக்க நுட்பமும்

''வீட்டிலிருந்தபடியே டோக்கியோவில் வாழும் ஒருவருடன் ஜென்தத்துவம் பற்றி விவாதிக்கலாம்; லாஸ் ஏஞ்செல்ஸில் உள்ள டிஸ்னிலாந்துக்குப் போய் வரலாம்; நுகர் பொருட்களை வீட்டிற்கே வரவழைக்கலாம்; இதற்குத் தோதான சக்தி வாய்ந்த புதிய ஊடகம் கிடைத்த மகிழ்ச்சியில் துள்ளுகிறார்கள் ஏகாதிபத்தியவாதிகள்''

கணிப்பொறியுடன் இணைக்கும் ஒரு புதிய மக்கள் பெருந்திரள் ஊடக சாதனம் உருவானது. எண்ணியல் முறையில் இயங்கும் ஒலி ஒளிப் பேழைகள் இப்போது பயன்படுத்தப்படுவதால் வானொளி- தொலைக்காட்சிப் பெட்டியை விட பலமடங்கு துல்லியமான ஒலி - ஒளிக் காட்சித் திறன் வாய்ந்ததாக இந்தப் பல்வினை கணிப்பொறிகள் விளங்குகின்றன.

சாதாரண தபால் - தந்தி வடிவில் இருந்த செய்தி - தகவல் தொடர்பு ஊடகம், தொலைபேசி, தொலைஅஞ்சல், தொலைவச்சு (டெலிபோன், டெலக்ஸ், டெலிபிரிண்டர்) புகுத்தப்பட்டதால் பெரும் மாற்றத்தைக் கண்டது. மின்னனுச் சாதனங்களின், கண்டு பிடிப்பும் நுழைவும் இந்தத் தொலைத் தொடர்பு முறையிலும் அதிநவீன, அதிவேகமாகப் பயன்பாடுகளை ஏற்படுத்தின. புகைப்படங்களையும், ஆவணங்களையும் பெரிய பெரிய பத்திரிகைகளையும் அப்படியே ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு அனுப்பக் கூடிய



''ஃபாக்ஸ்'' முதலிய வசதிகளும் வந்தன.

வானொலிக்காக ஒலிபரப்புவதைப் போல வானொளிக்கு ஒளி-ஒலி பரப்புவதற்காக சாதாரண அலை பரப்பு முறைகள் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் கடந்த பத்தாண்டுகளில் செயற்கைக் கோள்களின் பயன்பாடு பெருகியது; வானொளி தொலைக்காட்சி ஒலி-ஒளி பரப்புக்கும், செய்தி தொலைத் தொடர்புக்கும் செயற்கைக் கோள்கள் பயன்படுத்தப்படுவது புகுத்தப்பட்டது. இவ்வாறு மக்கள் பெருந்திரள் ஊடகத்திலும், செய்தி-தகவல் தொடர்பு சாதனங்களில் ஏற்பட்ட அதிநவீன, அதிவேக, செயல்திறன்களும், நுட்பங்களும் பல்வினைக் கணிப்பொறிகளுடன் இணைக்கப்பட்டபோது அது ஒரு புரட்சிகரமான வியத்தகு மக்கள் பெருந்திரள் ஊடகமாகவும், தகவல் தொடர்பு சாதனமாகவும் அவதாரமெடுத்து விட்டது. அதுதான் ''தகவலுலகம்''.

கணிப் பொறியுடன் ''மோடம்'' என்கிற கருவி மூலமாக தொலைபேசி இணைப்புக் கொடுத்தால் போதும், உள்ளூர் பகுதி, ஒரு நாட்டுக்குள் நேரடித்தொடர்பு, தொலைபேசி மற்றும் கண்டங்களைக் கடந்த தொலைபேசித் தொடர்பு ஏற்பட்டு விடும். இதன் மூலம் உலகம் முழுவதும் இப்படி இணைக்கப்படும் கணிப்பொறிகள் அனைத்தும் சேர்ந்த ஒரு பெரிய தகவல் தொடர்பு வலைப்பின்னல் உருவாக்கப்படுகிறது. ஏற்கனவே எண்ணியல் முறையில் கணிப்பொறிகள் இயங்குகின்றன. தொலைபேசி மூலம் வரும் மின்காந்தத் துடிப்புகளை எண்ணியல் முறையிலான கட்டளைகளாக கணிப்பொறிக்கு மாற்றித் தாப்படுகிறது. இதனால் கண்டங்களுக்கு அப்பால் இருந்து மட்டுமல்ல விண்வெளியில் இருந்தும் தனித்தனிக் கணிப் பொறிகளுக்குக் கட்டளைகளை அனுப்பவும் பெறவும் முடியும். இப்படி எதிர்த்திசையில் இருந்தும் செய்ய முடியும்.

இப்போதைக்கு இந்திய அரசுக்குச் சொந்தமான ''விதேஷ் சஞ்சார் நிகம்'' எனப்படும்


படிப்பகம்

www.padippakam.com

வெளிநாட்டுக்கான தகவல் வாரியம் மூலம் தொலைபேசி இணைப்புப் பெறுவதன் மூலம் உலகம் முழுவதும் உள்ள "தகவலுலக வலைப்பின்னலு"க்குள் இந்தியாவும் குதித்து விட்டது. இனி புதிதாக வரும் அந்நிய ஏகபோக தொலைத் தொடர்புக் கம்பெனிகள் மூலமாகவும் இந்தியாவிலுள்ள கணிப்பொறி உடமையாளர்கள் தகவலுலகவாசிகளாகி விடுவர். ஏற்கனவே ஒரு அறை அல்லது ஒரு கட்டிடத்தில் உள்ள கணிப்பொறிகள் நேரடி இணைப்பின் மூலம் உட்பகுதி வலைப்பின்னலையும், பல ஊர்களில் உள்ள கணிப்பொறிகள் பாந்தபகுதி வலைப்பின்னலையும் தனித் தனித் தொகுதிகளாக அமைத்துக் கொண்டு இயங்குவது ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பே வந்து விட்டது. இப்போது உலகம் முழுவதும் மட்டுமல்ல விண்வெளியிலும் இயங்கும் கணிப்பொறிகளுடன் இவை இணைக்கப்பட்டு வலைப்பின்னல்களின் வலைப்பின்னல்களாக உருவாகியுள்ள "தகவலுலகம்" "தகவல்-விவா அதிவேக, மிகைத்திறன் (சூப்பர்) நெடுஞ்சாலை" என்று அழைக்கப்படுகிறது.

☆ ☆ ☆

புதிய அவதாரமாகிய இந்தத் தகவலுலகத்தின் வாவை ஏற்கனவே நாம் வாழும் உலகம் எப்படி எதிர் கொள்கிறது? அறிவியல் - தொழில் நுட்ப ரீதியில் இது மகத்தான சாதனை, புரட்சிகரமான பயன்பாடுகள் நிறைந்தது என்பது நிச்சயமான உண்மை. பொருளாதாரம், தொழில், வணிக - வர்த்தக ரீதியில் உலகு தழுவிய தேசங்கடந்த பன்னாட்டு ஏகபோகக் கழகங்களுக்குப் பெரிதும் பயன்படக் கூடியது என்பதிலும் சந்தேகமில்லை. இந்தத் தகவலுகை நிறுவி இயக்குவதற்கான சாதனங்களை உருவாக்கி விற்பதில் கொள்ளை லாபமிருக்கிறது என்பதால் மட்டுமல்ல. தகவலுக சாதனங்களின் உற்பத்தி - விற்பனையுடன் நேரடித் தொண்டில் இல்லாத பல நிறுவனங்களின் தொழில், நிர்வாகத்திற்கும் இது பெரிதும் பயன்படும். ஆகையால் இந்தப் பிரிவினர் உலக உழைக்கும் மக்களையும் பின்தங்கிய ஏழை நாடுகளையும் மேலும் அதிகமாகக் கொள்ளையிட தமக்குத் துணைபுரியும் என்பதால் பேராசையுடன் தகவலுலகில் தமது ஆதிக்கத்தை நிறுவிக் கொள்ள விழைகின்றனர். இன்னொரு முக்கிய அம்சம் அதிநவீன மக்கள் பெருந்திரள் ஊடகம் என்கிற முறையிலும் தகவலுலகத்தின் பயன்பாடுகள். கடந்த பத்தாண்டுகளாக மேல்நிலை வல்லரசுகள் நிர்மாணித்து வரும் உலகமயமான மூலதனம், உழைப்புப் பிரிவினை, உற்பத்தி, விற்பனை விநியோகத்துக்கு ஒரு உலகச் சந்தைக்குப் பொருத்தமாக தேசங்களின், நாடுகளின் எல்லைகளை, தனித்தன்மைகளைத் தகர்க்கும் உலகமயமான பண்பாட்டைக் கட்டியமைப்பதில் தகவலுலகலம் தீர்மானகரமான பங்காற்ற முடியும்.



தகவலுலகம் சுதந்திரச் சிந்தனையாளர்களது கனவுலகம்; பேச்சுச் சுதந்திரத்தின் எல்லை; தனிநபர்கள் உலகைக் காணவும் கேட்கவுமான கண்கள் - காதுகள். உண்மைதானா?

இவ்வளவு சக்திவாய்ந்த ஒரு புதிய மக்கள் பெருந்திரள் ஊடகம் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் துள்ளுகிறார்கள் ஏகாத்தியபத்தியவாதிகள். அவர்களுடைய தாசர்களும் "இது சுதந்திரச் சிந்தனையாளர்களது கனவுலகம்; பேச்சுச்சுதந்திரத்தின் எல்லை; மரியாதை உணர்வை ஏற்படுத்தும் அதிகார அமைப்போ, முட்டாளடிக்கக் கூடியதோ அல்ல; இளமையானதும் அறிவுத் தீ கொழுந்து விட்டு எரியக் கூடியது; தலைமையகங்களோ, மைய அதிகாரமோ கொண்டதல்ல; யாரும் அதை நடத்துவதில்லை. தகவல்களை கருக்கொள்ளும் கருத்துக்களையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டு அறிவைப் பெருக்கிக் கொள்ளுவதற்கான சாதனம்; இதுவரை யாரும் கேளாதிருந்த தனி நபர்களின் இதய இராகம் இசைக்கக் கூடியது; தனி நபர்கள் உலகைக் காணவும் கேட்கவுமான கண்கள் - காதுகள். உலகின் ஏதாவது ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு டோக்கியோவில் வாழும் ஒருவருடன் ஜென் தத்துவம் பற்றி விவாதிக்கலாம்; இங்கிருந்தபடியே லாஸ்ஏஞ்செல்ஸில் உள்ள டிஸ்னிலாந்துக்குப் போய் வரலாம்; வீட்டிலிருந்தபடியே உங்களுக்குத் தேவையான சலவை இயந்திரங்களையோ, மின்சாரத்துடைப்பங்களையோ பார்வையிட்டுத் தேவையானதை உங்கள் வாசற்படிக்கே வரவழைக்கலாம். எல்லாம் ஒரு பொத்தானை அழுத்தி கிளிக் செய்தாலே போதும்." மொத்தத்தில் தகவலுலகத்தின் வரவு" ஜனநாயகத்தின் முழுமை நிலை" என்கின்றனர்.

ஆனால் தகவலுலகத்தின் வரவைப் பல சக்திகள் எதிர்க்கின்றன. ஈரான், சவுதி அரேபியா போன்ற மத அடிப்படைவாத நாடுகள், மதவிரோதக் கருத்துக்கள், தணிக்கை செய்யப்படாத விவகாரங்கள் தமது எல்லை கடந்து புகுந்து விடும் என்று



படிப்பகம்


www.padippakam.com

அஞ்சுகின்றன. இவையும் இவை போன்ற பிற்போக்கு, அதிகார வர்க்க, பாசிச சர்வாதிகார ஆட்சிகள் நடத்தும் நாடுகளும் முற்போக்கு, ஜனநாயக புரட்சிகரக் கருத்துக்கள் எல்லை தாண்டிப் புகுந்துவிடும் என்று அஞ்சுகின்றன. ஏகாதிபத்திய நாடுகளின் நடுத்தர வர்க்கத்தினரும், பழைமை வாதிகளும் பாலுறவு வக்கிரங்களைப் பரப்பும் சாதனமாக ''தகவலுலகம்'' பயன்படுவதைக் கண்டு பீதியடைந்துள்ளனர். அதே போல தகவலுலக சாதனங்களைப் பயன்படுத்தி ''சுதந்திர நாடுகளை அடிமை கொள்வதும், அந்நாடுகளின் இராணுவப் பாதுகாப்பு இரகசியங்களைத் திருடிக் கடத்துவதும், சதி - நாசவேலைகள் செய்வதும், எல்லாவற்றுக்கும் மேலாக எதிரிகள் மீதான அதிநவீனப் போழிவுப் போர்களை நடத்துவதும் சாத்தியம்; அந்தத் திசையில் புதிய ஆராய்ச்சிகள் முன்னேறி வருகின்றன.

தகவலுலகின் கண்டு பிடிப்பினால் அறிவியல், தொழில் நுட்பம், மருத்துவம், செய்தித் தொடர்பு, வர்த்தகம், சேவைத்துறை போன்றவற்றில் ஏற்படும் விளைவுகள் ஒரு புறம் இருக்கட்டும்; மிகப்பிரம்மாண்டமான சக்தி வாய்ந்த இன்னுமொரு புதிய மக்கள் பெருந்திரள் ஊடகம் என்கிற முறையில் தகவலுலகம் பண்பாட்டுத்துறையில் ஏற்படுத்தும் பாதிப்பை இப்போது கவனிப்போம்.

ஒரு புதிய அறிவியல் தொழில் நுட்பக் கண்டுபிடிப்பு மிகப் பெரிய சமூகப் பண்பாட்டு சாதனம் என்கிற முறையில் அதன் முக்கியம், பயன்பாட்டை நாம் அனைவரும் வரவேற்கத்தான் வேண்டும். ஆனால் சக்தி வாய்ந்த இந்தச் சாதனம் யார், யார் கையில் சிக்கியிருக்கிறது, எதற்குப் பயன்படுகிறது என்பதைப் பொருத்துத் தான் நம்முடைய அணுகு முறை அமைகிறது.

மனித குலமேம்பாட்டுக்குப் பயன்படக் கூடிய அணு சக்தியானது, ஏகாதிபத்தியப் போர் வெறியர்களின் கையில் சிக்கி மனித குலத்தையே அழிக்கக் கூடியதாக மாறிவிட்டது. அதைப்போலத்தான் ''தகவலுலகம்'' ஏகாதிபத்திய தீய சக்திகளிடம் சிக்கியுள்ளது. ஏற்கனவே சினிமா, வானொலி, 'காசினோ'' எனப்படும் சூதாட்ட விடுதிகள், பாலுறவுச் சுற்றுலா போன்றவை மூலம் ஏகாதிபத்திய காமக் களிவெறியாட்ட, கழிசடைப் பண்பாட்டை




46,000 உள்தொடர்பு கணிப் பொறி வலைப்பின்னல்கள் அடங்கிய மாபெரும் உலகளாவிய வலைப்பின்னல். கல்வி, திரைப்படம், அறிவியல், அரசியல், நிதித்துறை — உங்களுக்கு யாருடன் தொடர்பு கொள்ள வேண்டும்?

யும் தமது புதுப்புது நுகர் பொருட்களுக்கான சந்தைக் கலாச்சாரத்தையும் பரப்பி வருகின்றனர். ஏகாதிபத்திய வாதிகள் உலகம் முழுவதிலும் உள்ள பல்வேறு சிறிய- பெரிய தேசியப் பண்பாடு, நாகரிகம், மொழி போன்றவற்றின் தனித்துவம், சிறப்புகளைக் காலில் போட்டு மிதித்து நசுக்கி விட்டு ஏகாதிபத்திய உலகமயமான பண்பாடு, நாகரீகம், நுகர் பொருள் சந்தையை உருவாக்கி வருகின்றனர்.

உள்ளூர் அளவிலும், மண்டல - மாநில அளவிலும் தேசம் அல்லது நாடு தழுவிய அளவிலும் கணிப் பொறிகள் பல வலைப் பின்னல்கள் மூலம் இணைக்கப்பட்டு இறுதியில் உலகம் முழுவதும் ''இண்டர்நெட்'' எனப்படும் 46,000 வலைப்பின்னல்களின் வலைப்பின்னல் என்கிற பிரம்மாண்ட உருவம் எடுக்கிறது. இந்த ''இண்டர்நெட்'' எந்த ஒரு தனி நிறுவனத்துக்கும் உடமையானது அல்லவென்றாலும் உலகின் அனைத்து நாடுகளிலும் தேசங்கடந்த பல தொழில் கழகங்களும், அரசு நிறுவனங்களும் தான் இந்த வலைபின்னல்களின் வலைப் பின்னலை உருவாக்கி இயக்குகின்றன. இவற்றில் சந்தாதாரராகித் தமது கணிப்பொறிகளை இணைத்துதான் தகவலுலகத்துக்குள் நுழைய முடியும்.

அதாவது ஒரு பிரம்மாண்டமான ''காசினோவா'' பொருட்காட்சி அல்லது கண்காட்சி கேளிக்கைப் பூங்காவுக்கு நுழைவுச் சீட்டு பெறுவதைப் போல. அங்கே நுழைந்தபிறகு நீங்கள் பயன்பாடுள்ள அறிவியல் - தொழில் நுட்பம் அவசியமான கல்வி - கலாச்சாரம் நேர்மையான தொழில் வர்த்தக அரங்கத்துக்குள் போய் உருப்படியான காரியங்களைச் செய்கிறீர்களா? அல்லது வயிறு முட்டக் குடித்துப் பெருந்தீனி தின்று, ஆபாச வக்கிரக் களிவெறியாட்டம் போடுகிறீர்களா, சூதாட்டம் மற்றும் பிற கிரிமினல் குற்றங்கள் புரிகிறீர்களா, நிர்வாண - பாலுறவுக் காட்சிகளைக் கண்டு களிக்கிறீர்களா என்பதைப் பற்றி ''காசினோவா'', பொருட்காட்சி போன்றவற்றை நடத்துபவர்களுக்கு அக்கறை இல்லை. இன்னும் சொல்லுவதானால் புதுப்புது சந்தாதாரர்களைக் கவரும் வண்ணம் எந்த மாதிரியான இழிகேடான செயல்களையும் செய்யும் அரங்கங்களை

படிப்பகம்

www.padippakam.com

ஊக்குவிக்கிறார்கள். ஒவ்வொரு
அரங்கிலும் சந்தாதாரர் கழிக்கும் ஒவ்
வொரு நொடிக்கும் அரங்கத்தின
ரும், ''காசினோவா'' அல்லது
பொருட்காட்சி நடத்துபவர்களுக்கு
நல்ல வசூல் வேட்டைதான்.

அதைப்போல வலைப்பின்
னல்களின் வலைப் பின்னலை உரு
வாக்கி இயக்கும் தொலைத் தகவல்
துறை ஏகபோக நிறுவனங்கள், கழ
கங்கள் கொள்ளையடிப்பதே குறி
யாக உள்ளன. ''காசினோவா'' அல்
லது பொருட்காட்சி அல்லது கேளிக்
கைப் பூங்காவுக்குள் நுழைந்ததும்
எந்தெந்த அரங்கங்களில் என்
னென்ன கிடைக்கும் என்று அழைத்
துச் செல்லும் வழிகாட்டிகளைப்
போல கணிப்பொறி மென் பொருள்
திரட்டுகளை அதற்கான சில ஏகபோ
கத் தொழிற் கழகங்கள் தயாரித்து
விற்கின்றன. இவற்றின் வாலைப்
பிடித்துக் கொண்டே போனால்
''அமெரிக்கா ஆன்
லைன்'' ''கம்ப்சர்வ்''
''புரோடிஜி'' அமெ
ரிக்கா புரோவைடுஸ்
'' ''யூஸ்நெட்''
போன்ற மேலை நாடு
களினதும், ''ஆசியா
ஆன்லைன்'' ''ஷிரிம்
கிளப்'' போன்ற
கீழை நாடுகளினது
மாக ஏராளமான
அரங்குகள் தகவலுல
கத்தில் சேவை செய்து
வருகின்றன.
கொள்ளை இலாபம்
ஒன்றையே குறியாகக்
கொண்ட இந்த
சேவைகள் மொத்தம்
25000 திரைப்படங்கள்
முதல் ''பிளேபாய்'',
ஹஸ்ட்லர்'' ''பேந்த்
ஹவுஸ்'' போன்ற
பாலுறவு வக்கிரப் பத்திரிகைகள்
மட்டுமல்ல முழுக்க முழுக்க நீலத்
திரைப்படங்களையும் உலகம் முழு
வதுமுள்ள பல்வினைக் கணிப்பொ
றிகளுக்கு அனுப்புகின்றன.

அமெரிக்காவின் பென்சில்வே
னியா மாநிலம், பிட்ஸ்பர்க் நகரில்
உள்ள கார்னேஜி மெல்லோன் பல்க
லைக் கழகத்தின் ஒரு ஆராய்ச்சிக்
குழு, ''தகவல் மாநெடுஞ்சாலை
யில் நடக்கும் பாலுறவு வக்கிர இலக்
கியங்களின் வியாபாரம்'' என்கிற
பெயரில் ஓர் ஆய்வு நடத்தியுள்ளது.
அதன் படி ஒரு 18 மாதகாலத்தில் 917,
410 பாலுறவு வக்கிரப் படங்கள், சிறு
கதைகள், சித்தரிப்புக்கள், ஆண்டுத்
திரைப்படங்கள் தகவலுலகில்
நுழைக்கப்பட்டிருப்பதாகவும்,
அவற்றில் 83.5% பயனீட்டாளர்கள்
கண்டு களித்ததாகவும் தெரிகிறது.
தகவலுலகில் மிகப் பெரிய அளவில்
பயனீடுகள் பாலுறவு வக்கிரப் படங்
கள் தாம். ஒரு அமெரிக்கப் பல்க
லைக் கழகத்தின் தகவலுலக பயன்
பாடு பற்றிய ஆய்வின் படி 40-க்கு 13
இந்தவகையிலானவை தாம். பாலு
றவு வக்கிர இலக்கியங்கள் தடை
செய்யப்பட்டுள்ள சீனா, ஈரான்,
சவுதி அரேபியா போன்றவை உட்
பட 40 நாடுகளிலும், அமெரிக்கா
வின் 50 மாநிலங்களிலும் சேர்த்து
2000 நகரங்ளில் இவற்றைக் கண்டு
களிக்கிறார்கள்.

கல்வி, ஆய்வுக்காக உள்ள கல்
லூரி, பல்கலைக் கழகக் கணிப்பொ
றிகளை மாணவ மாணவியரும் வீடு
களின் தனி அறைகளில் உறங்கப்
போகும் விடலைகள் நள்ளிரவிலும்
இரகசியமாக இவற்றைப் பார்த்து
பிஞ்சிலேயே வெம்பிப் போகிறார்
கள். ''செய்திப் பலகை அமைப்பு''
எனப்படும் சேவை வலைப்பின்னல்
ஏற்பாட்டைப் பயன்படுத்தி சமூகவி
ரோதங்கள் நீலத்திரைப்பட, பாலு
றவு இலக்கிய வியாபாரம் நடத்து
கின்றனர். இப்படி பல ஆயிரம்
''செய்திப்பலகை அமைப்பு'' கள்
உள்ளன. இந்த சேவைக்காக மாதம்
10 முதல் 30 டாலர் வரை சந்தா வசூ
லிக்கின்றன. அமெரிக்காவில் உள்ள
5 பெரிய சேவையாளர்கள் ஒவ்வொ
ருவரும் ஆண்டுக்கு 10 இலட்சம்
டாலருக்கு மேல் இதன் மூலம் சம்
பாதிக்கின்றன. 'செய்திப்பலகை
அமைப்பு'' மூலம் அமெரிக்காவில்
25000 நீலப் படங்கள் காட்டி வியாபா
ரம் நடத்தி கடந்த ஆண்டு மட்டும்
எட்டு லட்சம் டாலர்கள் சம்பாதித்
துள்ளனர்; கலிபோர்னியாவில்
உள்ள ராபர்ட் - தாமஸ் கர்லீன் தம்ப
தியினர், இதற்காக இப்போது மூன்
றாண்டு சிறைத்தண்டனை அனுப
வித்து வருகின்றனர்.

காமக் களிவெறியாட்டங்க
ளும் கழிசடைக் கலாச்சாரமும் தாரா
ளமாக அனுமதிக்கப்பட்டு நிரம்பி
வழியும் அமெரிக்காவிலேயே பல
ரும் அதிர்ச்சியுறும் வண்ணம் தறி
கெட்டுப் போய்க் கொண்டிருக்கி
றது ''தகவலுலகம்''. அதில் உள்ள
ஆபாசவக்கிரக் காட்சிகளையெல்
லாம் தொகுத்து ''நீலப் புத்தகம்''
என்கிற பெயரில் அமெரிக்க நாடா
ளுமன்றத்தில் சுற்றுக்கு விட்ட
போது ''தகவலுலக''
வக்கிரங்களுக்குத்
தடை விதிக்க வேண்
டும் என்று ஒரு புதிய
சட்டமே போடப்பட்
டது. அமெரிக்க மக்க
ளில் 45 சத வீதத்தினர்
தடையை ஆதரித்த
போதும் 48 சதவீதத்தி
னர் தடை விதிக்கக்
கூடாது, தாராளமாக
அனுமதிக்க வேண்
டும் என்கின்றனர்.
இருந்த போதும் ஏற்க
னவே நிலவும்
கொஞ்ச நஞ்ச சமூக
ஒழுக்கம், நாகரீகம்,
பண்பாடுகளை வக்கி
ரமான முறையில்
''தகவலுலகம்'' சீர
ழிக்கும் என்கிற பய
பீதி உலகம் முழுவ
தும் பரவி வருகிறது.

**தகவல் உலகப் பிரிவான 'செய்திப் பலகை அமைப்பு' மூலம் அமெரிக்காவில் 25000 நீலப்படங்கள் காட்டி கடந்த ஆண்டு மட்டும் 8 லட்சம் டாலர்கள் சம்பாதித்துள்ளனர்.**



கம்யூனிசத்தை வீழ்த்தி கட்டுப்
பாடற்ற பொருளாதாரம், ஜனநாய
கம், தனிமனித சுதந்திரம் ஆகியவற்
றால் உலகையே ஒரு உன்னதமான
கிராமமாக மாற்றி அமைக்கப்
போவதாக எக்காளமிட்ட ஏகாதிபத்
தியங்கள் உருவாக்கும் உலகம் கழிச
டைத் தன்மை வாய்ந்ததாக இருக்
கும்; அறிவியல் தொழில் நுட்பப்
புரட்சியின் இன்னொரு சாதனை
யான தகவலுலகத்தையும் இதே
நோக்கத்துக்காகத்தான் அவர்கள்
பயன்படுத்துகிறார்கள்.

● லிங்கன்



படிப்பகம்

www.padippakam.com

# இந்து முன்னணி வழங்கும் சநாதன சகவாழ்வு

''தென் மாவட்ட சாதிக் கலவரம் 'இந்துக்களுக்கிடையில்' நடப்பதால், இந்து முன்னணி இராம. கோபாலன் தலைமையில் குழுவொன்று, 'அமைதிக்காக' கடந்த டிசம்பர் மாதம் சுற்றுப் பயணம் மேற்கொண்டது.

கலவரத்திற்கு இராம. கோபாலன் கண்டு பிடித்த காரணங்கள்:

☆ பா.ம.க. நிறுவனர் டாக்டர் இராமதாஸ் தூண்டி விடுகிறார்.

☆ கள்ளச் சாரயம் தடை செய்யப்படாதது.

☆ கொடியன்குளம் சம்பவத்தை வீடியோ படம் எடுத்து தென்காசி, ராஜபாளையம் பகுதிகளில் காட்டுவதை போலீசார் தடை செய்யவில்லை.

☆ ஆதி திராவிடருக்கு குடிநீர், வீட்டுமனை பட்டா போன்ற அடிப்படை வசதிகளை அரசாங்கம் செய்வதில்லை.

☆ பழனிபாபா தலைமையிலான ஜிகாத் கமிட்டியின் செயல்பாடுகள்

கலவரங்களைத் தடுக்க இராம. கோபாலன் வழி காட்டும் தீர்வுகள்:

☆ மார்கழி பஜனை எல்லாத் தெருக்களிலும் நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

☆ ஐயப்ப பக்தர்களை ஒருங்கிணைக்க வேண்டும்.

☆ அனைத்து தாப்பினரையும் கொண்ட இந்து ஒற்றுமை மையம் தொடங்க வேண்டும்.

☆ தலைவர்களின் பிறந்த நாளை எல்லோரும் கொண்டாட வேண்டும்.

மேற்கண்ட தீர்வுகளுக்கு மக்கள் என்ன கூறுகின்றனர்? நெல்லை சாதிக்கலவரத்தின் நேரடி செய்தித் தொகுப்பிற்காகச் சென்றிருந்த போது, தென்காசி அருகே உள்ள மேலகாம் கிராமத்தை சேர்ந்த தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் கூறியதாவது,

''10 நாட்களுக்கு முன்னாடி எஸ்.ஐ., டி.எஸ்.பி., பாதுகாப்புடன் இந்து முன்னணி இராம. கோபாலன் பத்து உறுப்பினர்களோடு வந்தாரு. வந்தவுங்க எல்லாரும் மற்ற சாதிக்காரங்க. நாமல்லாம் இந்துக்கள், ஒற்றுமையாக இருக்கனும். மதம் மாறக் கூடாது. 10 நாட்கள் கழித்து திரும்ப வருவோம். உங்க வீடுகளில் அனைவரும் தயிர் சாதம் செய்து எடுத்து வாருங்கள். நீங்கள் செய்ததை நாங்கள் சாப்பிடுவோம். நாங்கள் கொண்டு வரும் உணவுப் பொருட்களை நீங்கள் சாப்பிடுங்கள், என்று சொல்லிவிட்டுப் போனவரு இன்று வரை வரவில்லை. இவங்க சொல்றதெல்லாம் கழுத்துக்கு மேலே இருந்துதான் சார் வருது. எங்களை இந்துக்கள் என்று எப்படி சொல்ல முடியும்? எப்படி நடத்துகின்றார்கள் எங்களை? நிலம் அவர்களிடம், அடிமைத் தொழில்களை நாங்கதான் செய்கிறோம். வேறு யார் செய்வார்கள்? இந்துவெல்லாம் கிடக்கட்டும். முதலில் சுய உரிமை கொடுக்கட்டும் சார்''

○ ○ ○

சாதிக் கலவரங்களினால் பாதிக்கப்படும் தாழ்த்தப்பட்ட மக்கள் தமது எதிர்ப்புணர்வைக் காண்பிக்கும் வழியொன்று மதம் மாறுவதாக அறிவிப்பது. உண்மையில் மதம் மாறுவதைப் பற்றி தாழ்த்தப்பட்ட மக்கள் என்ன நினைக்கிறார்கள்?



''கலவரத்திற்கு இராமகோபாலன் கண்டுபிடித்த காரணங்களுக்கும், தேவர் பேரவை கூறுகின்ற காரணங்களுக்கும் வேறுபாடு இல்லை''

தென்காசி அருகே உள்ள நன்னகரம் கிராமத்தில் 13 வருடங்களுக்கு முன்பு இஸ்லாம் மதத்திற்கு மாறிய ஐந்து தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் உள்ளனர். இவர்கள் ஏனைய முஸ்லீம்களோடு மணஉறவு கொண்டு நல்ல நிலையில் இருப்பதாக ஏனைய மக்கள் கூறினார்கள். அப்படியானால் நீங்கள் ஏன் மதம் மாறவில்லை என்று கேட்டதற்கு,

''மதம் மாறுவது கோழைத்தனம். தமது சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள உண்மை நிலையை மறக்க நினைப்பதாகும். நாங்கள் மதம் மாறமாட்டோம். அடிமையாகவும் வாழ மாட்டோம். எதிர்த்து நின்று போராடுவோம்''. என்கிறார்கள் இக்கிராமத்தைச் சேர்ந்த கர்ணன், கணேசன் என்ற இளைஞர்கள்.

இதே கேள்விக்கு தென்காசி அருகே உள்ள சிந்தாமணி கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட இளைஞர்கள்,

''மதம் மாறினாலும் பிரச்சனை தீராது. இப்போது எங்களுக்கும் தேவர்களுக்கும் நடக்கும் சண்டை பின்னர் இந்து-முஸ்லீம் கலவரம் என்று தொடரும். அப்போதும் எங்களுக்குத்தான் பிரச்சனை'' என்கின்றனர்.

○ ○ ○

கலவரத்திற்கு இராம. கோபாலன் கண்டு பிடித்த காரணங்களுக்கும், தேவர் பேரவை கூறுகின்ற காரணங்களுக்கும் வேறுபாடு இல்லை. ஏனைய அரசியல் கட்சிகளும் ஏறக்குறைய இதைத்தான் கூறி வருகின்றனர்.

தென் மாவட்டங்களில் ஆதிக்கம் செலுத்தும் தேவர் சாதியினரை எதிர்த்து எந்த ஓட்டுக் கட்சியும் செயல்பட இயலாது. சாதியை உருவாக்கிய சநாதனிகளின் கூட்டமும் அதற்கு விதிவிலக்கல்ல. பாபர் மசூதி இடிப்பைப் படம் பிடித்து நாடெங்கும் காட்டி கலவரம் நடத்திய இந்து முன்னணி வகையறாக்கள், கொடியன்குளத்தை வீடியோவில் காட்டுவதை தேவர் பேரவையோடு சேர்ந்து எதிர்க்கிறது. அக்கிரகாரம் சேரியைப் பற்றி கவலைப்படுவதற்கு ஒரே காரணம் இஸ்லாமிய மதமாற்றம்.

அதே சமயம் மதமாற்றம் சமூக நிலையை மாற்றாது என்பதையும் அடிமைத்தனத்தை எதிர்த்துப் போராடுவதால்தான் அகற்ற முடியும் என்பதையும் தாழ்த்தப்பட்ட மக்கள் உணர்ந்திருப்பது முன்னேற்றகரமான விசயமாகும்.

வருணாசிரம வெறியை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ள பார்ப்பன இந்து மத வெறியர்களை மேற்கண்ட செய்திகள் தெளிவாக அடையாளம் காட்டுகிறது. ●

படிப்பகம்

www.padippakam.com



# பெய்யெனப் பெய்யும் மழை!

அலுத்துப் படுத்து
விழித்துப் பார்க்க
கடிகாரமுள் கண்ணை குத்தும்.

கருக்கலின் மார்பில்
ஆவின் சுரக்கும்
பெண்ணின் கனவுகள்
நெஞ்சில் வரளும்
தவிக்கும் குழந்தைக்கு
அழுத்திப் பால் கொடுக்க
கிழக்கில் இரத்தம் கட்டும்.

பரபரக்கச் சோறு பொங்கி
பேருந்து பிடிக்க
'அன்னநடை' தொலைந்து போகும்.

நெருக்கும் பயணத்தில்
நடக்கும் பாதையில்
கண்களின் வக்கிரம்
உடற்தோல் உரிக்கும்

பாத்திரம் துலக்கி
துணி வெளுத்து
ஓய்ச்சலின்றி அடங்கும் விசும்பலில்
பெய்யெனப் பெய்யும் 'கற்பின் மழை''

கணவனுக்கு, குழந்தைக்கு
குடும்பத்துக்கு
பங்குபோட்டபின்
மீதமிருக்கும் இரத்தம்
சம்பளத்தில் வடியும்.

கல்லாய் மண்ணாய்
கருதிய கணவன்
ஒண்ணாந்தேதி உவமை சொல்வான்,

''காந்தள் மலர்க் கைகள்
உன் கைகள்''

● துரை சண்முகம்






மக்கள் ஆதரவுடன்
விற்பனையாகி வரும்
ம.க.இ.க.வின் ஐந்தாவது
பாடல் ஒலிப்பேழை

**அண்ணன் வர்றாரு**

*காந்தி முதல் ஹவாலா வரை
ஓட்டுக் கட்சிகளின் பரிணாம
வீழ்ச்சியையும், திடீர் பணக்கார
அரசியல் ரவுடிகளின்
முகத்தையும் தோலுரிக்கும்
பாடல் தொகுப்பு*

கிடைக்குமிடம் விலை: ரூ. 30

பொ. தமிழ்மணி
உதய சூரியன் தேநீரகம்,
காந்திபுரம்,
தில்லைநகர் ஐந்தாவது குறுக்கு
திருச்சி - 620 018.


## அறிவிப்பு

அன்பார்ந்த வாசகர்களே,

பல தவிர்க்கவியலாத காரணங்களினால் புதிய கலாச்சாரம், அக்டோபர் '95 இதழுக்குப் பின் தற்போதுதான் வெளிவருகிறது. இதழை முறையாகக் கொண்டு வருவதற்கு எங்களால் இயன்ற முயற்சிகள் அனைத்தையும் செய்கிறோம். பொது சிவில் சட்டம் கட்டுரையின் இறுதிப் பகுதி அடுத்த இதழில் இடம்பெறும்.

இவண்
ஆசிரியர் குழு

படிப்பகம்